வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

மே 20 - 26, 2015

பக்கம் 24

விலை 30/-





# முள்ளி வாய்க்காலில் எழுந்தது பேரொளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீருக்குக் கீழே டென்னிஸ் மைதானம்!



டுபாய் நகரம் உலகில் மிக அதிகளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வரும் நகரம் என்பதுடன் அங்குள்ள உலகின் மிக உயரமான பூர்ஜ் கலிஃபா கட்டடம் மற்றும் பால்ம் தீவுகள் என்பவை உலகப் புகழ் பெற்றவை என்பது நீங்கள் அறிந்திருக்கக் கூடும்!

அறியாத புதிய தகவல் ஒன்று! அதாவது உலகிலேயே முதன் முறையாக தண்ணீர் உலகத்தின் கீழ் மீன்களும் கடல் வாழ் உயிரினங்களும் சூழ அதன் கீழே டென்னிஸ் மைதானம் அமைக்கப் படவுள்ளது.

போலிஷ் கட்டடக் கலைஞரான 30 வயதாகும் கொட்டாலா என்பவரது கனவுத் திட்டமாக இது அமையவுள்ளது. எனினும் இதை நிறைவேற்ற பலத்த சவால்கள் உள்ளதாக சில பொறியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மிக நீண்ட வளைந்த கண்ணாடிக் கூரையும், கணிசமான பார்வையாளர்கள் உள்வாங்கப் போதுமான இடத்தையும் நிர்மாணிப்பதே முக்கிய சவால்களாக உள்ளது. குறிப்பாக மிக நீண்ட, வலிமையான மற்றும் வளைந்த கண்ணாடிக் கூரையை உற்பத்தி செய்வதும் அதன் மூலம் அமைக்கப் படும் கூரை மிக வலிமையான தண்ணீரின் அழுத்தத்தால் உடைந்து விடாது இருப்பதும் மிகவும் சாத்தியமற்றதாகவே தோன்றுகின்றது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் மிகக் கடின உழைப்பினாலும் திட்டத்தாலும் டுபாயில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட பொறியியல் சின்னங்களான பூர்ஜ் கலிஃபா கட்டடம் மற்றும் மனிதனால் உலகில் செயற்கையாக முதலில் நிர்மாணிக்கப்பட்ட மிக அழகான மற்றும் பெரிய தீவுக் கூட்டமான பால்ம் ஆகியவை குறித்த நிலக்கீழ் டென்னிஸ் விளையாட்டு மைதான அமைப்பும் முற்றிலும் இயலாத ஒன்று அல்ல என்ற நம்பிக்கையை இதைத் திட்டமிட்டுள்ள கட்டடக் கலைஞர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது எனலாம் என்பது குறிப்பிடத்தக்கது.






Tiens Group என்ற சீனக் கம்பனி ஒன்று உலகில் மிக அதிகம் பேர் பங்கு பற்றிய விடுமுறை சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்து வரலாற்று சாதனை நிகழ்த்தியுள்ளது.

குறித்த கம்பனியானது விடுமுறையின் பொருட்டு தனது 6,400 ஊழியர்களையும் ஒரே தடவையில் 4 நாள் சுற்றுலாவாகப் பிரான்ஸ்-க்கு அழைத்துச் சென்றது.

இவர்கள் அனைவரையும் தெற்குப் பிரான்ஸின் Nice என்ற சுற்றுலா மையம் வரவேற்றது. மேலும் Tiens Group இன் அதிபர் லீ ஜின்யுவான் தனது 6,400 ஊழியர்களும் தங்குவதற்காகப் பாரிஸில் 140 ஹோட்டல்களைப் பதிவு செய்ததுடன் கேன்ஸ் மற்றும் மொனாக்கோ ஆகிய நகரங்களிலும் தமது சுற்றுலாவுக்காக 4,700 இற்கும் அதிகமான அறைகளையும் கூட அவர் ஒழுங்கு செய்துள்ளார்.

மேலும் குறித்த ஊழியர்கள் சுற்றிப் பார்க்கும் இடங்களில் முக்கியமாக லௌவ்ரே அருங்காட்சியகம் மற்றும் மௌலின் ரோக் கபரெட் ஷோ என்பனவும் அமைந்துள்ளன.

மேலும் பிரான்ஸில் ஓர் கடற்கரையில் இந்த 6,400 ஊழியர்களும் இணைந்து மனிதர்களால் அமையப் பெற்ற உலகின் மிக நீண்ட வசனத்தை அமைத்ததாகவும் அதனை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின் நிர்வாகிகள் பார்வையிட்டதாகவும் கூறப்படுகின்றது. உள்ளூர் ஊடகங்களின் தகவல் படி Tiens Group நிறுவனம் இந்த மிகப் பெரிய சுற்றுலாவுக்காக சுமார் 13 மில்லியன் யூரோ செலவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் போனாலும் அடங்காத இன வெறி

**அக்கினிகுமரன்**



## மே -16

தமிழ் மக்களின் கண்ணீரால் நினைவு கூரப்படும் நாள்!

முப்பது ஆண்டுகளாக நியாயமும், வீரமும், பேரிழப்புகளும் ஒப்பற்ற சாதனைகளும் பின்னிப் பிணைந்த தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆயுத வடிவத்தின் ஒரு கட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அன்றுடன் விடுதலை தேடி முழங்கிய தமிழரின் ஆயுதங்கள் மௌனித்துக் கொண்டன.

காலம் காலமாக எம் மீது திணிக்கப் பட்ட கொடிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எழுச்சி பெற்ற எமது விடுதலைப் போராட்டம், ஏறக் குறைய 2 இலட்சம் தமிழ் மக்களை விலையாகக் கொடுத்தது. போரின் இறுதி நாள்களில் மட்டும் அண்ணளவாக நாற்பதினாயிரம் பேர் கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் ஊனமுற்றனர். முப்பதினாயிரத் துக்கும் மேற்பட்ட போராளிகள் உயிர்களை அர்ப்பணித் தனர்.

தமிழ் மக்களின் விடுதலை வரலாற்றில் இரத்தத்தால் ஒரு பதிவை ஏற்படுத்தி மே -18 நாளை அனுஷ் டித்து நினைவு கூர்வதை இலங்கை அரசும், அரச படைகளும் தடுத்து வந்தன. தடைகளை மீறி அந்தத் தினத்தை நினைவு கூர்ந்தவர்கள் மீது அரச படைகள் தங்கள் அடாவடித் தனங்களைக் கட்ட விழ்த்து விட்டன.

எனினும் எல்லாவற்றையும் மீறி எமது மக்கள் மே -18இல் நினைவஞ்சலிகளை அஞ்சலிக்க எமக்கு தடை விதிக்கப் பட்ட அதே வேளையில் தென்னிலங்கையில் மே -18 பெரும் பொருள் செலவில் வெற்றி விழாவாகக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு சிங்கள மகனும், பல்லாயிரம் தமிழ் மக்கள் கொல்லப் பட்டமைக்கு பெருமை கொள்ளும் வகையில் உணர்வூட்டப்பட்டனர். வெட்கப்பட வேண்டிய விடயம் பெருமைக்குரியதாகப் போற்றப்பட்டது.

எனினும் ஜனாதிபதித் தேர்தலின் பின் அமைக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனாவின் தலைமையிலான புதிய அரசாங்கம், இந்த வருடம் இடம்பெறவிருந்த போர் வெற்றி விழாவை இரத்துச் செய்தது. அது மட்டுமன்றி மே -18 ஆம் நாளை போரில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக அனுஷ்டிக்க முடிவு செய்தது.

போரில் உயிரிழந்தவர்கள் எவராயிருந்தாலும் அவர்கள் எதிரிப்படையினராக இருந்தாலும் கூடக் கௌரவிப்பது ஒரு சர்வதேச மரபு. மஹிந்த அரசு அந்த மரபைத் தூக்கி எறிந்து விட்டு தனது குரூர இனவெறியை வெளிப்படுத்தும் முகமாகப் போர் வெற்றியைக் கொண்டாடியது. தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக இந்த நாளை அனுஷ்டிக்கும் படி கேட்டுக் கொண்டது. முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட பேரழிவை வெற்றி விழாவாக கொண்டாடி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற மனித குல விரோத விழாக்களை மைத்திரிபால அரசு இரத்துச் செய்தமை வரவேற்கத்தக்கது. அது மட்டுமன்றி போரில் இறந்தவர்களுக்கான அஞ்சலி நாளாக அனுஷ்டிக்க வாய்ப்பளித்தமையும் பாராட்டத்தக்கது.

இது மஹிந்த ராஜபக் ஷவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் பெரும் சினத்தை மூட்டி விட்டது. மஹிந்த வாயைத் திறந்து வார்த்தைகளுக்குப் பதில் இன வெறி விஷத்தைக் கக்க ஆரம்பித்து விட்டார்.

வெற்றி விழாக் கொண்டாட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து மஹிந்த ராஜபக் ஷ கருத்து வெளியிட்ட போது அது இராணுவத்தினருக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி எனவும் ரணில் விக்கிரமசிங்க புலம் பெயர் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் செய்யப்படுவதாகவும் புலம் பெயர் தமிழர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வரையில் நான் கைது செய்யப்படலாம் எனவும் தெரிவித் திருந்தார்.

அதே வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சனயாப்பா விடுதலைப் புலிகளை நினைவு கூர்பவர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும் அது தொடர்பாக தான் ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

போரில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செய்யும் போது அதில் விடுதலைப்புலிகளும் அடக்கம் என்பதை வைத்துக் கொண்டு மே -18 அஞ்சலிகளில் கலந்து கொள்பவர்களைக் கைது செய்யும் உள்நோக்கம் இருக்கிறதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இவர்கள் ஆட்சியில் இருந்த போது மே -18 இல் போரில் உயிரிழந்தவர்களை அஞ்சலிப்பதற்கு பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டமையையும், விடுதலைப்புலிகளை நினைவு கூர்ந்தார்கள் எனத் குற்றம் சாட்டப்பட்டதையும் மறந்து விட முடியாது.

எப்படியிருப்பினும், போரில் உயிரிழந் தவர்களை நினைவு கூர முடியும் எனத் தற்போதைய அரசாங்கம் அறிவித்திருப்பது இராணுவத் தினருக்கு இழைக்கப்பட்ட அநீதி என மஹிந்த தெரிவித் திருப்பது படையினர், மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் இனக் குரோத உணர்வுகளைத் தூண்டி விட எடுக்கப்படும் ஒரு பயங்கர நஞ்சுத்தனமான முயற்சியாகும். மேலும் இந்தப் பிரச்சினையைப் புலம் பெயர் தமிழர்களுடன் தொடர்பு படுத்துவது அப்பட்டமான ஒரு திசை திருப்பல் நடவடிக்கையாகும்.

மேலும் ஏற்கனவே பலவிதமான ஊழல் மோசடிகள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள அவர் அவற்றுக்காக இல்லாமல் புலம் பெயர் தமிழர்களின் விருப்பத்துக்கு ஏற்ற வகையிலேயே தான் கைது செய்யப்படக் கூடும் என ஒரு பெரும் ஏமாற்றத்தை அப்பாவிச் சிங்கள மக்கள் மத்தியில் கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களையும் அவை தொடர்பான விசாரணைகளையும் பூசி மெழுகி மறைத்து விடப் புலம் பெயர் தமிழர்களை இழுத்துக் கொண்டுள்ளார். இலங்கையில் மஹிந்தவும் அவரது கூட்டத்தினரும் மேற்கொண்டதாகக் கூறப்படும் ஊழல், மோசடி ,அதிகாரத்துஷ்பிரயோகம் என்பவற்றுக்கும் புலம் பெயர் தமிழர்களுக்கும் எப்படித் சம்பந்தம் இருக்க முடியும் என அவர் விளக்கவுமில்லை, அவரால் விளக்கவும் முடியாது.

அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருந்த போது அவரின் நஞ்சுத்தனமான வார்த்தைகளும் நடவடிக்கைகளும் புனிதமானவையாகக் காட்டப்பட்டன. இப்போது அதிகாரம் இழந்த பின்பு அந்தப் போலிப் புனிதங்கள் அம்பலப்பட உள்நாட்டுச் சாட்சிகள் தலை நிமிர்ந்து நிற்கின்றன. இப்போது அவற்றைப் புலம் பெயர் தமிழர்களுக்குள் தள்ளி விட்டு பாதுகாக்க முயல்கிறார் அவர். அதிகாரம் போய் விட்டாலும், இன வெறியை மூலதனமாகக் கொண்டு மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர்கள் எடுக்கும் முயற்சிகள் ,நிச்சயம் எதிர்காலத்தில் சிங்கள மக்களாலேயே முறியடிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்து கொண்டிருக்கின்றது எண்ணெய்ப் பூமி 3



எஸ்.ஜே.பிரசாத்

'அடடா அகங்கார அரக்க கைகளில் உலகிங்கே'

'அழிக்கும் அதிகாரம் இவர்க்கு தந்தவன் எவன் இங்கே'

இது ஒரு பாடலின் வரி. இந்த வரிகள் இந்த இடத்திற்கு பொருந்தும் என்று எண்ணுகின்றோம்.

மனித குலத்தில் புரையோடி மனதை அறுக்கும் ரணமெல்லாம் அரங்கேறிக்கொண்டிருக்கிறது ஈராக்கில்.

நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவிற்கு வன்முறையும் வெறியாட்டமும் தலைவிரித்தாடுகின்றன அங்கே.

இதை நடத்திவருகிறது ஐ.எஸ்.

என்னதான் தேவைகள் இருந்தாலும் இந்த மாதிரியான வன்முறை வெறியாட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமா?

இல்லை. நிச்சயமாக முடியாது.

கழுத்தறுப்பதென்பதை சொல்லக்கேட்டிருப்போம்.

இவர்கள் அதனை செய்ய இப்போது உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

வெறுமனே பார்த்துக்கொண்டு மட்டும் இருப்பதுதான் பெரும் கொடுமை.

தற்போது எவரையேனும் பிணைக்கைதியாக பிடித்து வைத்துக் கொண்டு, பிணைத்தொகை கேட்டு தினந்தோறும் செய்திகளில் இடம்பிடிக்கும் இவர்கள், அது கிடைக்காத போது கொடூரமான முறையில் அந்த கைதிகளை கொன்று வீடியோவை வேறு வெளியிட்டு விடுகிறார்கள்.

இந்த வீடியோக்கள் சமூக வலைத் தளங்களில் வலம் வந்த வண்ணமே உள்ளன.

இந்த அமைப்பு உருவாகுவதற்கு காரணம் யார்?

சதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு ஈராக்கில் ஒரு அதிகார வெற்றிடம் வந்தது.

அந்த வெற்றிடத்தை நிரப்புகிறதா ஐ.எஸ்? என்று தெரியாது.

ஆனாலும், இந்த அதிகார வெற்றிடத் தாலயே ஐ.எஸ் அமைப்பு மிகப்பெரும் சக்தியாக உருமாறியதாகச் சொல்கிறார்கள்.

சிரியாவில் நடந்த உள்நாட்டுப் போரில் தலையிட்டது ஐ.எஸ். அதனால் இன்னும் அதன் பலம் கூடியது.

அதனூடு உலக நாடுகளின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்துக்கொண்டது ஐ.எஸ்.

ரஷ்யா, அமெரிக்கா நாடுகளின் ஆயுதங்களையும், சிரியா மற்றும் ஈராக் வங்கிகளில் பல கோடி மதிப்பிலான கஜானாக்களையும் கொள்ளையடித்து பெரும் பணக்கார தீவிரவாதிகளாக உருமாறினர்.

இது அனைத்தும் சிரியா யுத்தத்தில் தலையிட்டதனால் கிடைத்தவை.

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மொசுல் நகரை கைப்பற்றி தாங்கள் யார் என்பதையும், தாங்கள் எதையும் செய்ய துணிந்தவர்கள் என்பதையும் உலக நாடுகளுக்கு பறைசாற்றினர்.

ஈராக், சிரியா அல்லாத பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள், பல பெண்களும் கூட இதில் சேரவும் இவர்களை திருமணம் செய்யவும் படையெடுத்த வண்ணமே உள்ளனர்.

இந்த அமைப்பின் முக்கிய நோக்கம், ஈரான் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய ஓர் இஸ்லாமிய ஆட்சியை உருவாக்க வேண்டும் என்பதாகும்.

அதுமட்டுமல்லாமல் பக்கத்து நாடான லெபனான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்டான், துருக்கி ஆகிய நாடுகளையும் ஒன்றிணைத்துப் பெரிய விஸ்தீரணத்துடன் அளவிலான இஸ்லாமிய தேசத்தை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

இதையெல்லாம் செய்ய வாய்ப்புக் கிடைக்குமா?

ஹமாஸும் சரி மற்றைய பாலஸ்தீன போராளிகளும் சரி ஜோர்டானின் ஹிஸ்புல்லாவும் சரி இதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்று கருதப்படுகிறது.

காரணம் இவர்கள் யாரும் ஐ.எஸ்.ஸை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் செய்யும் அக்கிரமங்களை அவர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

ஈரான் கூட ஐ.எஸ்.ஸை எச்சரிக்கிறது. நீங்கள் செய்வது அநியாயம் என்ற தொனியில்.

இப்படியிருக்க பாலஸ்தீன், ஜோர்டானை இணைக்க முடியுமா ஐ.எஸ்.ஸால்?

ஈராக்கிலும், சிரியாவிலும் இவர்களின் கை ஓங்கியிருக் கலாம். ஆனால் ஜோர்டானுக்குள்ளோ பாலஸ்தீனத்திற்குள்ளோ இவர்கள் நுழைவது அவ்வளவு சுலபமால்ல.

காரணம் இஸ்ரேலால் கூட இதை செய்து கொள்ள முடியாமல் தான் இன்றுவரை தலையை போட்டு பிய்த்துக்கொண்டிருக்கிறது.

சில காலங்களுக்கு முன்பு இஸ்ரேல் உளவாளி என்று கூறி, 12 வயது சிறுவனைச் சுட்டுக்கொலை செய்த வீடியோவை, ஐ.எஸ். வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

ஐ.எஸ்., பிணைக் கைதிகளை பிடித்து தலையைத் துண்டிடித்து படுகொலை செய்து, அதை வீடியோ படம் எடுத்து, 'ஒன்லைன்'னில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வந்தது.

இந்த நிலையில் அவர்கள் இஸ்ரேலைச் சேர்ந்த முசல்லாம் என்ற அரேபியர் ஒருவரை பிணைக்கைதியாக பிடித்து வைத்திருந்தனர்.

19 வயதே ஆன அவர், ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில், தான் ஒரு வெளிநாட்டு போராளி என்று கூறி சேர்ந்து, இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட்டுக்கு வேவு பார்த்ததாக ஐ.எஸ். தீவிரவாதிகள் குற்றம் சாட்டி பிணைக்கைதி ஆக்கினர்.

ஆனால் முசல்லாம், இஸ்ரேல் உளவாளி என்ற வாதத்தை அவரது தந்தை மறுத்தார். என் மகன் அப்பாவி. அவன் தீவிரவாதிகளின் பிடியில் இருந்து தப்பிக்க முயற்சித்ததால் அவனை இஸ்ரேல் உளவாளி என்று குற்றம் சாட்டுகின்றனர்.

என் மகன் துருக்கிக்கு 2014ஆம் ஆண்டு சுற்றுலா பயணியாகச் சென்ற போது, காணாமல் போய் விட்டான். பின்னர் அவன் சிரியாவில் உள்ள ரக்காவுக்கு சென்றது தெரியவந்தது. நாங்கள் இருவரும் தொலைபேசியில் பேசிக்கொண்டோம் எனத் தந்தை கூறினார்.

முசல்லாம் மீதான குற்றச்சாட்டை இஸ்ரேலும் மறுத்தது. அவர் தன் தனிப்பட்ட விருப்பத்தின்பேரில்தான் சிரியாவுக்கு சென்று ஐ.எஸ். இயக்கத்தில் சேர்ந்ததாக கூறியது.

ஆனால், முசல்லாம் மீதான குற்றச்சாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் உறுதியாக இருந்தனர். அதன்பிறகு அவரை சுட்டுக்கொன்று அதை 13 நிமிடம் ஓடுகிற வீடியோ படமாக எடுத்து 'ஒன்லைன்'னில் வெளியிட்டனர்.

இந்த வீடியோவில் செம்மஞ்சள் நிற உடை அணிந்து காணப்பட்ட முசல்லாம், முழங்காலில் நிற்க வைக்கப்பட்டிருந்தார். அவர் தன்னை இஸ்ரேல் உளவு அமைப்பு வேவு பார்க்க தேர்ந்தெடுத்த விதம் பற்றி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார்.

தொடர்ந்து அந்த வீடியோவில் காணப்படும் தீவிரவாதி ஒருவர், பிரான்சில் உள்ள யூதர்களுக்கு மிரட்டல் விடுக்கிறார்.

அதையடுத்து முழங்காலில் நின்ற முசல்லாமை 12 வயதே ஆன ஒரு சிறுவன், நெற்றிக்கு நேராக சுடுகிறான். இதில் அவர் சரிந்து விழுந்தபோது, மீண்டும் அவரை துப்பாக்கியால் சரமாரியாக சுடுகிறான்.

இதில் அவர் உயிரிழக்கிறார்.

இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில், இந்த வீடியோ பற்றி எங்களுக்கு தெரியும். ஆனால் அது உண்மையானதுதானா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றனர்.

அல்கொய்தா என்னும் மாபெரும் தீவிரவாத இயக்கத்தின் மூலம் சிறிய இயக்கமாக தோன்றிய இந்த ஐ.எஸ் அமைப்பு இன்று அல்கொய்தாவையும் மிஞ்சியதோடு உலகளவில் மிகப்பெரிய தீவிரவாத இயக்கமாக விளங்கி வருவது தான் சாபக்கேடு.

ஆயுதம் ஏந்திய இந்தக் கொடூர கும்பலிடம் இருந்து பொதுமக்களை காப்பாற்ற வேண்டிய கடமை உலக நாடுகளின் முக்கிய பொறுப்பு என்பதை உலக தலைவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இதுவாகும்!!!




(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு படு பாதகம்- தமிழர் மண்ணில் ஒரு கறை

> இத்தகைய கொடூர மான கொலைகளையும் படுபாதகச் செயல்களி லும் ஈடுபடும் கயவர்களுக்கு எதிராக யாழ்ப்பாண சட்டத்தரணிகள் கூட் டாக ஒரு முடிவு எடுக்க வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுக்கின் றனர். இத்தகைய கொடியவர் கள் சார்பாக எந்த ஒரு கற்றறிந்த சட்டத்தரணி யும் நீதிமன்றில் ஆஜராகக் கூடா தென்பதே, பொதுநலம் சார்ந்த அந்தக் கோரிக்கை.

அவசரம் அவசரமாக காலை 7.30 மணிக்கு பாடசாலைச் சீருடையை அணிந்து கொண்ட சிவலோகநாதன் வித்தியா வழமை போன்று பாடசாலைப் புத்தகப் பையுடன் புறப்பட்டாள். தாயாரிடம் விடைபெற்று தன் இலட்சியக் கனவுடன் ஓட்டமும் நடையுமாக புறப்பட்ட அவள் தனக்கு விரிக்கப்பட்டி ருக் கும் வலையை அறிந்திருக்க மாட்டாள். படு சுட்டிப் பெண்ணான வித்தியா படிப்பில் மட்டுமல்ல பாடசாலையின் புறச் செயற்பாடுகளிலும் வெகு சாமர்த்தியமானவள்.தான் ஓர் ஊடகவியலாளராக வரவேண்டும் என்ற பெரு விருப்புடன் க.பொ.த உயர்தரத்தில் ஊடகவியலை ஒரு பாடமாக கொண்டிருந்தாள். வறுமையின் கோரப்பிடியில் அவள் குடும்பம் சிக்கித் தவித்தது. தந்தையார் நோய்வாய்ப்பட்டு நடக்க முடியாத நிலையில் படுத்த படுக்கையாகி விட்டார். அக்கா யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்றார். அண்ணாவோ குடும்பப் பொறுப்பைச் சுமந்தவனாக தன் சகோதரிகளின் கற்றலுக்கும் வீட்டுச் சுமையையும் பொறுப்புடன் ஏற்றுக் கொண்டார்.

புங்குடுதீவில் இடப்பெயர்வுக்குப் பின்னர் பல வீடுகள் ஆள் அரவம் அற்ற பாழடைந்த வீடுகளாகவே காட்சியளிக்கின்றன. மேலும் எருக்கலம் பற்றைகளும் பனை வடலிகளும் கூட்டமாக வளர்ந்து பாதையோரங்களை மறைத்துக் கொண்டு இருக்கின்றன. இந்தப் பாழடைந்த வீடுகள் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப் படுவதை பலரும் அறிவர். குடிமக்களின் கும்மாளம் அடிக்குமிடமாகவும், ஊர் மாடுகளை இறைச்சியாக்கும் படுபாதகச் செயல்களிலும் ஆள்கள் அற்ற இந்த வீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.


இத்தகைய சூழல்கள் நிறைந்த ஒற்றையடிப் பாதை வழியாக தன்னந் தனியே வெகு வேகமாக பாடசாலை ஆரம்பமாகும் முன்னர் ஓடி வந்து காலைப்பிரார்த்தனைக்கு ஏற்ற ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உந்துகிறது. காமுகர்கள் வலையை விரித்து விட்டு அந்தப் பாதையில் ஒளிந்திருப்பதை அறியாத அப்பாவிப் பெண் வித்தியா வழமை போல் விரைந்து செல்கிறாள்.

திடீரென எதிர்ப்பட்ட கயவர்களால் விழித்து மருண்டு போய் நிற்கும் வித்தியாவைக் கட்டிப்பிடித்து தரதரவென இழுத் துச் செல்கின்றனர். அவள் கத்தாதபடி வாயை இறுகப் பொத்திப் பிடிக்கின்றனர். காலிலிருந்த வெண்ணிறச் சப்பாத்து கழன்று விடுகின்றது. கையிலிருந்த புத்தகப்பையிலிருந்து புத்தகங்கள் சிதறுகின்றன. போட்டிருந்த பாடசாலைச் சீருடை கிழித்தெடுக்கப்பட்டு வித்தியாவின் வாய்க்குள் திமிறத் திமிறத் திணிக்கப் படுகிறது. சிங்கத்தின் பிடியில் சிக்குண்ட மானாக வித்தியா துடிக்கின்றாள். கொலை களை அஞ்சாது செய்யும் பாத கர்கள் காமப் பசியால் குதறுகின் றனர்.

வெளியி ல் தெரியாதபடி கனகச்சிதமாக எல்லாவற்றையும் முடித்து விட்ட கயவர்கள், அந்த இடத்தை விட்டு அகன்று விட்டனர். ஏதுமறியாத பெற்றோர்களும் தம் பிள்ளை பாடசாலை விட்டு வந்து விடுவாள். என அவசரம் அவசரமாக சமைத்து விட்டு மகள் வரும் பாதை மீது விழி வைத்துக் காத்திருக்கின்றனர். பாடசாலைக்கு ஒழுங்காக வரும் வித்தியா இன்று ஏன் பாடசாலைக்கு வரவில்லை என சக மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் விசாரிக்கின் றனர். பதிலின்றி மௌனமாகின்றனர்.

வழி மீது விழி வைத்த தாய் பாடசாலையை விட்டு நேர காலத்துடன் வந்து விடும் மகளைக் காணாது பாடசாலைப் பிள்ளைகளைக் கேட்கின்றாள். ஒருவரும் பாடசாலையில் தாம் காணவில்லை என்றே பதிலளிக்கின் றனர். பதறிப் போன தாயும் சகோதரனும் பாடசாலைக்கு ஓடிச்செல்கின்றனர். அங்கும் இன்று வித்தியா பாடசாலைக்கு வரவில்லை என்றே பதில் வருகின்றது. குமுறும் மனதுடனும் கொந்தளிக்கும் எண்ணங்களுடனும் பாடசாலைக்கும் வீட்டுக்குமிடையே உள்ளே வீடுகள், பற்றைக்காடுகள், பாதைகள் என இரவு 11.00 மணி வரையும் தேடுகின்றனர். சமைத்த உணவு தேடுவாரற்றுக் கிடக்கின்றது. வீட்டில் ஊண், உறக்கமின்றித் துடிக்கின்றனர். மகள் வந்து விடமாட்டாளா? இருட்டிலும் விழிகள் தேடுகின்றன. சாதாரணமாக விடிந்து விடும் அந்த இரவு கூட அன்றுமட்டும் ஏனோ விடியமறுத்தன. விடிந்ததும்விடியாததுமாக மீண்டும் தேடத் தொடங் கினர். கிணறுகள், பாழடைந்த வீடுகளை மீண்டும் அலசுகின்றனர். வீட்டிலிருந்து செல்லும் பல பாதைகளையும் ஓடி ஓடித் தேடு கின் றனர். ஈற்றில் ஒரு ஒற்றை யடிப் பாதை, ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாழடைந்த வீடொன்றின் பின்புறமாக வுள்ள பற்றைக்குள் கால்கள் அகட்டிக் கட்டப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட் டாள்.

சடலம் யாழ்.போதனா வைத்திய சாலை யில் பொலிஸாரால் ஒப்படைக்கப் பட்டு பிரேத பரிசோதனை நடை பெற்றது. சடலத்தின் மீது காணப்பட்ட ஆதாரங் களைக் கொண்டு மிகக் கொடூரமான வன்புணர்வு மற்றும் கூட்டு வன் புணர்வு இடம்பெற்றுள்ளது என்பதை யும் உடற்கூற்றுப் பரிசோதனைகள் உறுதிப் படுத்துவதாக சட்டவைத்திய அதிகாரி அறிக்கை கூறுகின்றது. மேலும் உடலின் பிரதான பாகங்கள் மேலதிக சோதனைக்காக கொழும்பு வைத்திய சாலையின் சட்ட வைத் தியப் பிரிவுக்கு அனுப்பப் படவுள் ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரி விக் கின்றன. அந்த அறிக்கை யின் பின் னரே உறுதியான அறிக்கை நீதி மன்றுக்குச் சமர்ப்பிக் கப்படும்.




இந்தப் படுபாதகக் கொலை தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலி ஸார் தீவிரமான விசாரணை களில் ஈடுபட்டு வருகின்றனர். மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்துள் ளதாக சொல்லப்படுகின்றது. இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என் றும் சொல்லப்படுகிறது. ஊர்காவற் றுறை மாவட்ட நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில், மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருப்பின் அவர்களைத் தேடிப்பிடிப்பதில் பொலிஸார் விசேட புலனாய் வுக் குழுக்களை அமைத்துள்ளனர்.

பாடசாலை மாணவியின் கொடூரக் கொலை யைக் கேள்விப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்கள் கொதித்தெழுந்து வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தீவகப் பிரதேசமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ் டிக் கப்பட்டதுடன் போக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டன. பாடசாலை மாணவர் களும் போராட்டத்தில் ஈடுபட்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு நயினாதீவு நாகவிகாரதிபதியிடம் மகஜர் சமர்ப்பித்தனர்.

புங்குடுதீவுப் பாடசாலைகள் யாவும் தீவிரமான போராட்டத்தின் பின்னர் கண்ணீர் சிந்தியவாறு வித்யாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். வானமும் கு்முறிக்குமுறி கண்ணீர் சொரிந்தது. சாரதாம்பாள், தர்சினி வரிசையில் புங்குடுதீவில் வித்தியாவும் காமுகர்களால் பசியாறப்பட்டுள்ளார். உடன் துரித நடவடிக்கை எடுக்க வேண்டு மென பல தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் எழுந்துள் ளன. புங்குடுதீவுப் படுபாதகம் தமிழர் மண்ணுக்கு ஒரு கறை

இத்தகைய கொடூரமான கொலைகளையும் படுபாதகச்செயல்களிலும் ஈடுபடும் கயவர்களுக்கு எதிராக யாழ்ப்பாண சட்டத்தரணிகள் கூட்டாக ஒரு முடிவு எடுக்க வேண்டுமெனப் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். இத்தகைய கொடியவர்கள் சார்பாக எந்த வொரு கற்றறிந்த சட்டத்தரணியும் நீதிமன்றில் ஆஜராகக் கூடாதென்பதே , பொதுநலம் சார்ந்த அந்தக் கோரிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## ரயில் விபத்துக்களில் இருந்து மாணவரைக் காப்பாற்ற...

- பாதுகாப்பற்ற கடவையில், ரயில் மோதித் தூக்கி வீசப்பட்ட மாணவன் ஆபத்தான நிலையில் ஆஸ் பத்திரியில்.
- தபால் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலி.
- தென்னிலங்கையில் இருந்து வடக்கே வருகை தந்த பயணிகள் வாகனமும் ரயிலும் மோதுண்டதில் நான்கு பேர் உயிர் இழந்தனர்.
- விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதால் அரசுக்கு உண்டாகும் பாதிப்புகள் ஒரு புறமிருக்க, மக்களின் உயிர் பறிக்கப்படுவது, அரசின் அசண்டைத்தனத்தின் விளைவு என்பதனைத் தட்டிக் கழிக்கமுடியாது.
- புதிதாகத் திறக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையில், பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளன.

- அவற்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விரைந்து நியமிக்கப்படுவதற்கு ரயில்வேத் திணைக் களம் நட வடிக்கை மேற்கொள்ளாது இருப்பது ஏன்...?

அவை ஒரு புறம் இருக்க, பாடசாலை செல்லும் மாணவர்களும் விபத்துக்களுக்கு மறைமுகமாகத் துணை போகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதே.

ஒளி, ஒலி சமிக்ஞைகள் பொருத்தப்பட்டுள்ள ரயில் கடவைகளில், அவை இயங்கும்போது வாகனங்கள் தரித்து ஒதுங்கி நிற்கின்றன. சைக்கிள்களில் பயணம் செய்யும் பெரியவர்கள் தரித்து நிற்கின்றனர்.

ஆனால், இளங்கன்று பயம் அறியாது என்பதற்கு ஏற்ப, வாலிபர்கள் மட்டுமன்றி மாணவர்களும் ரயில் கடவைகளைக் கருத்தில் கொள்ளாது அவற்றைக் கடப்பதனை இங்கு கவலையுடன் எடுத்துக்கூறவேண்டிய ஓர் எதிர்மறையான (Negetive) அம்சமாகும்.

மேற்போந்த நிலையைச் சுட்டிக்காட்டுவதனால், ரயில்வேத் திணைக்களம் முன்னர் நடைமுறையில் இருந்த ரயில் கடவை பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பணிக்கு அமர்த்துவதில் அசமந்தம் காட்டக்கூடாது.

மறுபுறத்தில் வடக்குக்கான ரயில்சேவை, நீண்ட காலமாக - கடந்த சுமார் கால்நூற்றாண்டாக - முடங்கிக் கிடந்ததால், இப்போதைய மாணவர்களுக்கு அது பரிச்சயம் இல்லாததாகி விட்டது.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை விதியின் பிழையன்று என்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடிய மேற்போந்த கவிதை இன்று தொட்டுக் காட்டக்கூடியது.

ஆகவே ரயில் கடவை விபத்துக்களுக்கு மாணவர்கள் மீது மட்டும் பழி போட்டு விட்டுத் தப்பித்துக் கொள்வதற்கு ரயில்வே திணைக்களம் முனைய லாகாது.

அந்த வகையில் ரயில் விபத்துக்களில் இருந்து மாணவர்களைக் காப்பாற்றுவதற்கு-யாழ். வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் ரயில்வே மற்றும் கல்வித் திணைக்களம் இணைந்து- ரயில் விபத்துக் குறித்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க முனைந்துள்ளமை குறிப்பிடக்கூடியதும், பெரும் பயன்தர வல்ல திட்டமுமாகும்.

# அற்றுப் போன அரசியல் நாகரீகம்

- ஆஷாத்

தொழிற்கட்சித் தலைவர் மில்பான்ட் தனது கட்சியின் தோல்விக்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று அந்தக்கட்சி யின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறியுள்ளார். அவ்வாறே லிபரல் கட்சி யின் தலைவர் நிர்லாஸ் ஜோஸ் தங்கள் தோல்விக்கான பொறுப்பைத் தானே பொறுப்பேற்றுச் ஏற்று தலைமைப் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இலங்கை மக்களைப் பொறுத்தவரை இது ஒரு ஆச்சரி யம் தரும் நடவடிக்கைதான். இங்கு எந்த ஒரு அரசியல் வாதியோ, அரசியல் தலைவரோ தங்கள் தோல்விக்கான பொறுப்பை ஏற்பது கிடையாது. மாறாகத் தேல்விக்கான காரணங்களை மற்றவர்கள் தலையில் சுமத்தி விட்டு தங்கள் தங்கள் பதவியை இறுகப்பிடித்துக்கொள்வார்கள்.

உண்மையில் இடம்பெற்ற பிரித்தானிய பொதுத் தேர்தலில் டேவிட் கமரூனைத் தலைவராகக் கொண்ட கொன்சவேற்றிக் கட்சி 331 ஆசனங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி 50 இடங்களை மட்டுமே வெற்றி பெற்று படுதோல்வியைச் சந்தித்துள்ளது. கடந்த அரசாங்கத்தில் கொன்சவேற்றிக் கட்சியுடன் இணைந்து ஆட்சியில் பங்கு கொண்டிருந்த லிபரல் கட்சி 8 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது.

கொன்சவேற்றிக் கட்சி வெற்றி பெறக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும்கூட ஏற்கனவே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகள் சில கூடுதல் ஆசனங்களையே பெற முடியும் எனவும் பெரும்பாலும் ஒரு



கூட்டரசாங்கமே அமையக்கூடும் எனவும் தெரிவித்தன. அது மட்டுமன்றி லிபரல் கட்சியின் செல்வாக்கு கடந்த தேர்தலைவிட அதிகரித்திருப்பதாகவும் கூறப்பட்டது.

எனினும் கருத்துக்கணிப்புக்களையும், அரசியல் ஆய்வாளர்களின் ஊகங்களையும் உடைத்துக்கொண்டு கொன்சவேற்றிவ் கட்சி 331 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும் வெற்றியை ஈட்டியுள்ளது.

இந்த வெற்றியை அடுத்து, தொழிற்கட்சித் தலைவர் மில்பான்ட் தனது கட்சியின் தோல்விக்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று அந்தக்கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறியுள்ளார். அவ்வாறே லிபரல் கட்சியின் தலைவர் நிர்லாஸ் ஜோஸ் தங்கள் தோல்விக்கான பொறுப்பைத் தானே பொறுப்பேற்று தலைமைப் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இலங்கை மக்களைப் பொறுத்தவரை இது ஒரு ஆச்சரியம் தரும் நடவடிக்கைதான். இங்கு எந்த ஒரு அரசியல்வாதியோ, அரசியல் தலைவரோ தங்கள் தோல்விக்கான பொறுப்பை ஏற்பது கிடையாது. மாறாகத் தேல்விக்கான காரணங்களை மற்றவர்கள் தலையில் சுமத்தி விட்டு தங்கள் தங்கள் பதவியை இறுகப்பிடித்துக்கொள்வார்கள்.

பிரிட்டன் ஒரு ஏகாதிபத்திய நாடு என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை. வட அமெரிக்கா, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் என்பவற்றை ஆக்கிரமித்து, அங்கெல்லாம் எழுச்சிபெற்ற சுதந்திரப் போராட்டங்களை கர்ண கடூரமான முறையில் ஒடுக்கி தனது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பொருளாதார மேலாகித்தத்தை நிலை நிறுத்திய நாடுதான். எந்த வித தயக்கமுமின்றி மனிதப் படுகொலைகளை நடத்தித் தனது ஆதிகத்தை நிலை நிறுத்தியது.

ஆனால் அந்த நாடு தனது நாட்டில் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது. அதன் காரணமாகவே பிரித்தானியாவை ஜனநாயகத்தின் தொட்டில் என அழைக்கிறார்கள்.

இலங்கை, இந்தியா உட்படப் பல நாடுகளில் பிரிட்டனால் அறிமுகப்படுத்தப்பட்ட நாடாளு மன்ற ஜனநாயக முறையே இன்றும் நிலை பெற்றுள்ளது.

ஆனால், எமது நாடுகளில் பிரித்தானியாவின் ஒடுக்குமுறை வழிமுறைகள் மட்டும் பிரிட்டனை விடத் தீவிரமான முறையில் அமுல்படுத்தப்படும்.



அதேவேளையில் அவர்களால் கட்டிக்காக்கப்படும் தார்மீக ஜனநாயக சம்பிரதாயங்கள் கைவிடப்பட்டு விட்டன.

தொழிற்கட்சித் தலைவர், மிலிபான்ட்டும், லிபிரல் கட்சித் தலைவர் நிர்லாஸ்ல் ஜோன்ஸூம் தமது தோல்விகளுக்கு தார்மீகப் பொறுப்பேற்று தமது தலைமைப் பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டனர். எமது நாட்டில் இதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு நடைமுறையாகும்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 5 இலட்சம் வாக்குகளால் தோல்வியடைந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளிவந்ததுமே மஹிந்த தனது தோல்விக்குத் தமிழர்களே கார ணம் என்றார். அடுத்து சிறுபான் மையினரே காரணம் என்றார். இன்னொரு சந்தர்ப்பத்தில் தனது தோல்விக்கு பொதுபலசேனவே காரணம் என்றார்.

ஆனால் தான் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. மாறாக மீண்டும் பிரதமராக வந்து அதிகாரத்தைக் கைப்பற்ற பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார்.

இந்தியாவின் மேற்கு வங்களாத் தில் இருந்த ஜலியன் வாலா பூங்காவில் காங்கிரஸ் பொதுக்கூட் டத்தில் கலந்து கொள்ள வந்த மக்களை பிரிட்டிஷ் படைகள் சுற்றிவளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து 600க்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்தன. அதே பாணியில் தமிழ்க் கிராமங்களைச் சுற்றி வளைத்து இலங்கையின் அரச படைகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தன.

அந்தப் படுகொலை நடவடிக்கையை பின்பற்றி அவரை விட மோசமான முறையில் தமிழ் மக்களைக் கொன்று குவித்த இலங்கையின் ஆட்சியாளர்கள், தோற்கும்போது தோல்விக்குத் தார்மீகப்பொறுப்பேற்கும் ஜனநாயக நாகரிகத்தை நினைத்துக்கூடப்பார்ப்பதில்லை.

**ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளிவந்ததுமே மஹிந்த தனது தோல்விக்குத் தமிழர்களே காரணம் என்றார். அடுத்து சிறுபான்மையினரே காரணம் என்றார். இன்னொரு சந்தர்ப்பத்தில் தனது தோல்விக்கு பொதுபலசேனவே காரணம் என்றார்.**


**ஆனால் தான் பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை. மாறாக மீண்டும் பிரதமராக வந்து அதிகாரத்தைக் கைப்பற்ற பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறார்.**

வியட்நாமில் இடம்பெற்ற மைலாய் படுகொலை போல், இந்தியாவில் இடம்பெற்ற ஜலியன்வாலா படுகொலை போல், வல்வெட்டித்துறை, ஒதியமலை, வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, வீரபுரம், கொக்கட்டிச்சோலை, உடும்பன் குளம் என ஏராளமான படுகொலைகளை நடத்தி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பலநூறு தமிழர்களைக் கொன்ற பெருமை இலங்கை அரச படைகளுக்கு உண்டு.

மைலாய் படுகொலை தொடர்பாக அமெரிக்க அரசும், ஜலியன் வாலா படுகொலை பற்றி பிரிட்டிஷ் அரசும் விசாரணைகளை நடத்தின என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அவை பற்றி எந்த வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது மட்டுமல்ல. அவற்றில் ஈடுபட்ட முக்கிய தளபதிகளுக்குப் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன.

அப்படியான முறையில் ஜனநாயகத்தை காலில் போட்டு மிதிக்கும் இலங்கையின் ஆட்சியாளர்கள், தேர்தலில் மக்கள் வழங்கும் தீர்ப்பை ஏற்று தங்கள் தோல்விக்கு தார்மீகப்பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியுமா?

மஹிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு அவர் வேறு தரப்பினரைக் குற்றஞ் சாட்டினாலும் அடிப்படையில் அவரே காரணமாக இருந்துள்ளார். போர்க்காலத் திலும், போர் முடிந்த பின்பும் தமிழ் மக்கள் மேல் பெரும் இனப்படுகொலையை நடத்திவிட்டு, அதற்காகப் பெருமை பட்டு வெற்றி விழாக்கள் கொண்டாடிய போது தமிழ் மக்கள் அவருக்கு எதிராக வாக்களிப்பதில் என்ன தவறு இருக்க முடியும்.



இவ்வாறே முஸ்லிம்களுக்கு எதிராகச் கொடுமைகளை மேற்கொண்ட பொதுபலசேனா ஹெல உறுமய போன்ற அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கிய அவரை முஸ்லிம் மக்கள் மன்னிக்க முடியுமா?

எனவே மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு அவரே பொறுப்பாக இருந்துள்ளார். அதற்கு அவர் தார்மீகப் பொறுப்பேற்று அவர் அரசியலிலிருந்தே ஒதுங்கியிருக்க வேண்டும்.

ஆனால், அவரோ தனது ஆதரவாளர்கள் மூலம் மீண்டும் பிரதமர் பதவியைக் கைப்பற்றி அதிகாரத்தை அடையப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றார்.

இது அவரின் அரசியல் நாகரிகம்.

ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம், இன அழிப்பு போன்ற மனித குல விரோத நடவடிக்கைகளில் வெட்கமின்றி ஈடுபட்டவாறே அதற்காகப் பெருமைப் படுபவர்களிடம் அரசியல் நாகரீகத்தை எதிர்பார்க்க முடியுமா? ஆனால் நீதி விழித்தெழுந்து பொங்கும்போது இப்படியான நபர்கள் அரசியலிலிருந்து முற்றாகவே நசுக்கிவீசப்படுவது நிச்சயம். ***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நன்றி
இலக்கியா

ஜனாதிபதியைக் கொலைசெய்ய சதித்திட்டமா? அது கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை. அம்பாந் தோட்டை மாவட்டத்தின் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுக்கூட்டம் அன்றைய தினம் கூட்டப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குணுகொல பெலஸ்ஸவில் உள்ள கோட்டையிலேயே இந்த கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் பிரதானி அல்லது தலைவர் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இந்த நிலையில் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பல்வேறு உறுப்பினர்களும் அன்றைய தினம் அங்குணுகொல பெலஸ்ஸவை அடையலாயினர்.

ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற சிறப்பு பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிலையில் அங்குணுகொலபெலஸ்ஸ கோட்டையின் பாதுகாப்பு தொடர்பில் சொல்ல வேண்டியதில்லை.

அப்போது முற்பகல் 10.30 மணியிருக்கும், ஏனைய பிரமுகர்களை போன்றே நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாமல் ராஜபக்ஷவும் அந்த கூட்டத்திற்கு வருகை தரலானார்.

நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர். அந்த கூட்டத்துக்கு வரும் வேளையிலும் அங்கு மூன்று வரிசைகளை கொண்ட சோதனை சாவடிகளில் சோதனை ஆரம்பிக்கப்பட்டிருந்துள்ளன.

உள்ளே செல்ல மக்கள் நிரம்பியிருந்த நிலையில், பாதுகாப்பு சோதனைகளுக்கு அவர்கள் முகம் கொடுத்திருந்தனர்.

இந்த நிலையில் தான் கூட்டத்திற்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சோதனை சாவடியை கடந்து ஓரிரு அடிகள் முன்னோக்கி நகரும் போது ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகரான மல்வலகேயை கண்டு உரையாடியுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகேயை ஏற்கனவே அறிந்திருந்ததாலோ என்னவோ நாமல்ராஜபக்ஷ உரையாடலை மேற்கொண்டுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகே ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவிலும் கடமையாற்றி இருந்த நிலையிலேயே தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் பழைய அறிமுகத்தாலோ என்னவோ, நாமல் ராஜபக்ஷ உதவி பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகேயுடன் உரையாடியுள்ளதாக அறிய முடிகின்றது.

நாமல்: இந்த இடத்திலா டியூட்டி (கடமை)?

மல்வலகே: ஆம்

நாமல்: இவரையும் உள்ளே செல்ல அனுமதியுங்கள் என்று கூறியவாறு நபர் ஒருவரை நாமல் ராஜபக்ஷ காட்டியுள்ளார்.

அவர் வேறு யாருமல்ல நாமல் ராஜபக்ஷவுடன் வந்த முன்னாள் ஜனாதிபதி மந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு படையணியில் கடமையாற்றிய இராணுவத்தின் 4 ஆம் ரெஜிமன்ட்டை சேர்ந்த கொமாண்டோ படை வீரரான கோப்ரல் சேனக குமார.

நாமலின் வேண்டுகோளுக்கு அமைவாக கோப்ரல் சேனக குமாரவை அழைத்த உதவி பொலிஸ் அத்தியட்சர் மல்வலகே அவரிடம்ஆயுதம் ஏதும் உடன் வைத்துள்ளீரா? என வினவினார்.

இதற்கு கோப்ரல் சேனககுமார இல்லை என பதிலளிக்கவே உதவி பொலிஸ் அத்தியட்சர் மல்வலகே அவரை உடல் சோதனைகளுக்கு உட்படுத்தாது உள்ளே செல்ல அனுமதித்துள்ளார்.

இந்த நிலையில் தான் கூட்டம் ஆரம்பித்த போது ஜனாதிபதியின் மெய்ப்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவருக்கு கோப்ரல் சேனக குமாரவின் உடலில் பின்பக்கம் இடது புறத்தே காற்சட்டை பையானது சாதாரணமாக இல்லாமல் புடைத்திருப்பது தெரிந்துள்ளது.

இது தொடர்பில் அந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரர் தனக்கு அருகில் இருந்த மற்றொரு அதிரடிப்படையின் வீரருக்கு விடயத்தை கூறி கோப்ரல் சேனக குமாரவை விசாரித்துள்ளார்.

அந்த கோப்ரல் சேனக குமாரவிடம் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் நீர் யார் ? என கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்கு அந்த கோப்ரல் தான் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் கூட்டத்திற்கு வந்ததாகவும் அவரது பாதுகாப்பு தொடர்பிலேயே வந்ததாகவும் கூறியுள்ளார்.

இதன்போது கோப்ரல் சேனக குமாரவின் வலது புற இடுப்புப் பகுதியும் சற்று புடைத்திருப்பதை அவதானித்துள்ள குறித்த விஷேட அதிரடிப்படை வீரர் கோப்ரல் சேனக குமார அணிந்திருந்த சேர்ட்டை சற்று விலக்கி என்ன என்று பார்த்துள்ளார்.

இதன்போதே இடுப்பின் கைத்துப்பாக்கி ஒன்று இருப்பதை அவர் அவதானித்துள்ளார். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுக்கும் விசாரணைகளில் அதிரடிப்படை வீரர்களால் வாக்கு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த கோப்ரல் தர வீரர் துப்பாக்கியுடன் கையும் களவுமாக பிடிபடும் போது அவர் கூட்டத்திற்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நோக்கி முன்னேறியதாகவும், அதனாலேயே பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் அவரை விஷேடமாக அவதானித்ததாகவும் அதன் பலனாகவே அவர் சிக்கியதாகவும் கூறப்படுகின்றது.

அதன் காரணமாகவே தான் இடுப்பில் கைத்துப்பாக்கியுடன் இருந்த கோப்ரல் சானக குமார உடனடியாக அங்கிருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் சார்ஜன்ட் தர அதிகாரியான நிஸங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அந்த கோப்ரலை எவ்வித சோதனைகளுக்கும் உட்படுத்தாது அந்த பாதுகாப்பு அதிகாரி அவரை உடனடியாக நிகழ்வு மண்டபத்திலிருந்து வெளியேற்றியுள்ளார்.

இதுதான் நடந்த சம்பவம். இந்த நிலையில் இந்த சம்பவமானது ஊடகங்கள் வாயிலாக பிரசித்தம் செய்யப்படவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு குறித்து கேள்விகள் பல எழுப்பப்பட்டன.

அதன் விளைவாக உடனடியாக செயற்பட்ட பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு உடன் கையளித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன அதன் பணிப்பாளர் தகஹமுல்ல ஆகியோரின் நேரடி கட்டுப்பாட்டில் இது தொடர்பிலான விசாரணைகள் உதவி பொலிஸ் அத்தியட்சர் சானி அபேசேகர தலைமையிலான சிறப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் உதவி பொலிஸ் அத்தியட்சர் சானி அபேசேகர தலைமையிலான பொலிஸ் குழு இந்த விவகாரம் குறித்து மிக சூட்சுமமாக விசாரணைகளை ஆரம்பித்து வாக்கு மூலங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

இந்த நிலையிலேயே கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி திங்களன்று கோப்ரல் சேனக குமார நாமல் ராஜபக்ஷவின் சாரதி ஆகியோர் வாக்கு மூலம் ஒன்றை வழங்க குற்றப் புலனாய்வு பிரிவுக்கு சுயமாக வருகை தந்துள்ளனர்.

அதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்கு மூலம் அளித்துள்ள கோப்ரல் சேனக குமார, எனது உத்தியோகபூர்வ கைத்துப்பாக்கியை நான் வாகனத்திலேயே வைத்து விட்டுவிட்டே சென்றேன்.

வாகனத்தின் 'கெப் ஹோலில்' நான் அதனை வைத்து விட்டுத்தான் சென்றேன் என குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் கோப்ரலுடன் வந்த சாரதியும் துப்பாக்கியை கோப்ரல் வாகனத்திலேயே வைத்துச் சென்றதை உறுதி செய்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவம் இடம்பெற்ற போது குறித்த கோப்ரலை பிடித்து ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைத்த விஷேட அதிரடிப்படை வீரரிடமும் அருகில் இருந்த ஏனைய வீரர்களிடமும் வாக்கு மூலங்களைப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்தனர்.

இதன்போது வாக்கு மூலமளித்த நான்கு பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் குறித்த கோப்ரலிடம் கைத்துப்பாக்கியொன்று இருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கோப்ரல் தனது துப்பாக்கியை வாகனத்தில் வைத்து விட்டுச் சென்றிருந்தால் அவரது இடுப்பில் இருந்த துப்பாக்கி யாருடையது என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த நிலையில் தான் கோப்ரல் சேனக குமாரவை கடந்த மே மாதம் 2 ஆம் திகதி ஆயுதம் ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், அன்றைய தினம் இரவோடிரவாக அவரை அங்குணுபொலபெலஸ்ஸ நீதிவான் நயன்த சமரதுங்க முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர். கடந்த 11ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அதன் பின்னர் விசாரணைகள் நிறைவு பெறாததை காரணம் காட்டியும் கோப்ரலின் இடுப்பிலிருந்த துப்பாக்கி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை காரணம் காட்டியும் அவரை மீண்டும் இம்மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இச்சம்பவம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள் ளதுடன் சில முக்கியமான அடிப்படை களைக் கொண்டு புலனாய்வு பிரிவின ரின் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

முக்கியமாக குறித்த கோப்ரல் வீரர்

( 18 ஆம் பக்கம் பார்க்க)

**முக்கியமாக குறித்த கோப்ரல் வீரர் உள் நுழைந்ததன் நோக்கம் என்ன? அவ்வாறு உள் நுழைந்தவர் ஜனாதிபதியை நெருங்க முற் பட்டதன் மர்மம் என்ன?**

**வாகனத்தில் துப்பாக்கியை வைத்துவிட்டு வந்திருந்தால் இடுப்பில் இருந்த துப்பாக்கி சட்ட விரோத செயல் ஒன்றினை அல்லது சதியொன்றினை நிறைவேற்ற திட்டமிட்டு கொண்டு வரப்பட்டதா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புருஜோத்தமன் தங்கமயில்

# முன்னோக்கிப் பாய்தல்



தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஆறு வருடங்களாகின்றது. ஏழு தசாப்த காலத்தைத் தாண்டிய தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்களில், மூன்று தசாப்த காலம் ஆயுதப் போராட்டத்தினால் பெரும் முனைப்புப் பெற்றிருந்தது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் மற்றும் இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்போடு இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுதப் போராட்டக் களத்திலிருந்து மே 18, 2009இல் முற்றுமுழுதாக அகற்றியது. விடுதலைப் புலிகள் அகற்றப்பட்டதோடு, தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டமும் முடிவுக்கு வந்தது.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு மற்றும் வெற்றி தோல்விகள் குறித்து ஆயிரத்தெட்டு முறை பேசப்பட்டுவிட்டது. பெற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து அவற்றின் அனுபவத்தோடு, பெற்று முன்னோக்கி நகர வேண்டிய கட்டத்தில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள்.

ஆனால், அடுத்த கட்டம் நோக்கி நகர்தலுக்கான தீர்க்கமான புள்ளியை தமிழ் மக்களும், அவர்களது அரசியல் தலைமைகளும் இன்னும் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

அரசியல் உரிமைப் போராட்டங்களின் வடிவங்கள் உலக அரசியல் போக்கினை உள்வாங்கி அதற்கேற்ப தன்னை மெருகேற்றிக் கொண்டு நகர வேண்டும். இல்லையென்றால், மீண்டும் பேரழிவுகளையே தரும்.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு அதற்கான பெரும் சான்று. அத்தகைய நிலையில், யதார்த்த சூழ்நிலைகளை புரிந்து கொண்டு உரிமைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் ஆழமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டிய தருணமிது. ஆனால், தமிழ்ச் சூழலில் சிந்தனை மற்றும் கருத்தியல் என்பது பெரும் குழப்ப நிலைக்குள்ளேயே இருக்கின்றது. அது, போர் சிதைவு மனநிலை போன்றது.

தமிழ் மக்கள், வட மாகாண சபைத் தேர்தலில் பெருவாரியாக வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற வைத்ததில் புறக்காரணிகளின் அழுத்தங்கள் இருந்த போதும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்து ஆட்சி மாற்றத்தில் பங்களித்ததிலும் குறிப்பிடத்தக்க நகர்வுகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இவை முன்னோக்கி பாய்வதற்கான தீர்க்கமான புள்ளி அல்ல. தமிழ் அரசியல் தலைமைகள் இவற்றை தீர்மானம் மிக்க புள்ளிகளாக காட்டிவிட்டு கரைந்துவிடக் கூடாது.

அது, 1970களுக்கு முந்தைய கால கட்டத்தை நோக்கி பின்நகர்வதற்கு ஒப்பானது. இப்படியான நிலை அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தரும் என்று கருத முடியாது. மாறாக, பெரும் விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வைத்து, எமது போராட்டங்களை நீர்த்துப் போக செய்துவிடும்.

தமிழ் மக்களும் அரசியல் தலைமைகளும் இரண்டு விடயங்களில் தெளிவாக இருக்க வேண்டிய தருணம் இது. இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் உள்ளிட்ட உள்ளக அரசியலில் தொடர்ந்தும் தீர்மானம் மிக்க சக்திகளாக வலம் வருவதுடன், உலக அரசியலை உள்வாங்கி அதனை எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி சிந்தித்து செயலாற்றுவது.

ஏனெனில், இரண்டில் ஒன்று கைமீறிச் சென்றாலும் மீண்டும் மீண்டும் தமிழ் மக்கள் இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும். உள்ளக அரசியலில் நம்பிக்கை கொள்ள முடியாது என்று, அதனைத் தவிர்த்துவிட்டு சர்வதேசத்திடம் முழுமையாக மண்டியிடுவதோ, உலக அரசியலின் போக்கினை உணராமல் இருப்பதோ நல்லதல்ல.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை வழங்குவதற்கே, இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களை சர்வதேசம் அதிகம் பயன்படுத்தியது.

அதன்மூலம் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதி கிடைத்துவிடும் என்று தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள முடியாது. அதுபோல, அவற்றை அரசியல் மாற்றங்களின் போக்கில் கையாளும் வல்லமையையும் பெற்றிருக்க வேண்டும்.

இறுதி மோதல்களில் கொல்லப்பட்ட, பல ஆயிரக்கணக்கான உறவுகளை நினைவு கூருவதற்கே இன்னமும் தமிழ் மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டுள்ள போதிலும், அரச இயந்திரத்தின் போக்கில் அவ்வளவு மாறுதல்கள் ஏற்படவில்லை. அப்படி ஏற்படும் என்றும் நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. ஏனெனில், இலங்கை அரசு இயந்திரம் என்பது சிங்கள பௌத்த தேசியவாதத்தினால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

இன்னொரு புறம், தமிழரின் அரசியல் தலைமைகள் இளைஞர்களின் அரசியல் ஆர்வத்தை ரசிக்க வில்லையோ என்று தோன்றுகின்றது. ஏனெனில், தமிழ் அரசியல் உரிமைப் போராட்டக்களத்தின் அனைத்துக் கடிவாளங்களையும் தாமே வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றார்கள்.

தம்மை தொடர்ந்தும் தலைமைகளாக வைத்துக் கொள்ளும் என்று அவர்கள் நம்புகின்றார் கள். கடந்த காலத்தில் ஆயுதப் போராட்டங்களினூடு இளைஞர்கள் கொண்ட எழுச்சி என்பது, பெரும் அரசியல் தலைமைகளை போராட்டக் களத்திலிருந்து முற்று முழுதாக அகற்றியிருந்தது. அத்தகைய நிலையில், அவர்கள் தமது தொடர் இருப்புக்கான அச்சுறுத்தலை மீண்டும் எதிர்கொள்ளத் தயாராக இல்லை.

இளைஞர்களைப் பொறுத்த வரை, அரசியல் மீதான ஆர்வத்தை அடிப்படையில் கொண்டிருந் தாலும் கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட இழப்புக்களும் அது கொடுத்துள்ள வலியும் பெருமளவில் இருப்பதால் முன்னோக்கி நகர்வது தொடர்பில் தமக்குள் அதீத சந்தேகங்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

சந்தேகத்தை நீக்கி நம்பிக்கையளித்து அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான வழிகாட்டிகளாக இருக்க வேண்டிய பெரும் அரசியல் தலைமைகள் அச்சுறுத்தலாக உணர்ந்து விலகி நிற்கின்றனர். இந்த நிலைமை என்பது அடுத்த கட்டத்துக்கான நகர்வினை நிறையவே காலம் தாழ்த்தி வைத்திருக்கின்றது.

தேர்தல்களில் வாக்களிப்பு என்கிற விடயத்தை பிரதான விடயமாக கருதும் இளைஞர்கள், அரசியல் போராட்டங்களின் செயற்பாட்டுத் தளத்துக்கும் நகர வேண்டும்.

அது, வன்முறை ரீதியாக இல்லா மல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அதற்கு, கருத்தியல் ரீதியான அரசியலுக்குள் அவர்கள் வர வேண்டும். கருத்தி யல்- சிந்தனை ரீதியான அரசிய லின் வெற்றிடம் தான் எமது தொடர் தோல்விக்கான காரண மாகவும் கொள்ளப்படக் கூடியது.

தமிழரின் பெரும் அரசியல் தலைமைகள் ஒற்றைப்படைச் சிந்தனையிலிருந்து பல

(18ஆம் பக்கம் பார்க்க)

**இளைஞர்களைப் பொறுத்த வரை, அரசியல் மீதான ஆர்வத்தை அடிப்படையில் கொண்டிருந்தாலும், கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட இழப்புக்களும் அவை கொடுத்துள்ள வலியும் பெருமளவில் இருப்பதால், முன் னோக்கி நகர்வது தொடர்பில் தமக்குள் அதீத சந்தேகங்களைக் கொண்டிருக்கின்றார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம்-22



முதலாளிகளும் பண்ணை யாளர்களும் ஆதிக்கக்காரர்களும் புரிந்து தெளிந்தவுடன் எதிர்ப்பவர்கள் பெருவாரி ஏழை மக்களும் எதிர் பார்ப்பதற்கான முக்கிய காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்தி வரும், மிகத் தெளிவான தீவிரமான எதிர்ப்புப் பிரச்சாரம் தான்!

பிறந்து பெயர் வைக்கப்படுவதற்கு முன்பே தொடங்கிவிடும் கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரத்தில் அமெரிக்க - ரஷ்ய எதிர்ப்பு என்ற ஓர் உணர்வும் உள்ளடங்கி இருக்கிறது. பிறவி முதல் திருப்பும் திசை எல்லாம் கம்யூனிச எதிர்ப்புக் காற்றையே கம்யூனிச எதிர்ப்புத் தண்ணீரையே குடித்து கம்யூனிஸ எதிர்ப்புப் பாடமே படித்து கம்யூனிஸ எதிர்ப்புப் பஜனையே செய்து கம்யூனிஸ எதிர்ப்பு வெள்ளத்தில் நீந்திக் குளித்து வளர்க்கப்பட்ட இவர்களிடம் இந்த எதிர்ப்பு வெறிவிதைக்கப்பட்டு இருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் பிரசார வலிமை மிகப் பெரிது. ஏடுகள், வானொலிகள், தொலைக் காட்சிகள், திரைப்படங்கள் , கல்வி முறை, தேர்தல் முறை, சட்டம், நீதி எல்லாமே கம்யூனிச எதிர்ப்பு நச்சுத் தைலம் பூசப்பட்டவை தான் எனவே இவர்கள் மீது கோபம் கொண்டு ஒதுக்கி விடக் கூடாது. எரிச்சல் கொண்டு விலகக் கூடாது. கம்யூனிசம், சோசலிசம் என்பதை விவரம் புரியாமல் பழகிப்போன ஓர் உணர்வால் எதிர்ப்பவரும் கூட தேசம், மக்கள் முன்னேற்றம் என்றால் வெறி கொண்டு எதிர்க்கமாட்டார்கள். ஏனவே அவர்கள் பற்றியுள்ள தேசபக்தி உணர்வைக் கொண்டே அவர்களைத் திரட்டலாம். அப்படித்தான் அவர்களைத் திரட்ட தொடங்கினார் காஸ்ட்ரோ.

மார்க்கியத்தை உள்வாங்கிக் கொண்ட பிறகு காஸ்ட்ரோ க்யூப சரித்திரத்தின் ஒவ்வோர் அத்தியாயத்தையும் மீண்டும் வாசிக்கத் தொடங்கினார். வாசிக்க வாசிக்க சில புதிய வெளிச்சங்கள் கிடைத்தன. ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம் போன்ற பதங்களின் மெய்யான அர்த்தத்தை அவர் க்யூப சரித்திரத்தில் கண்டு கொண்டார்.


முதலில் கொலம்பஸ். சரித்திர ஏடுகள் கொலம்பஸைமிகப் பெரிய கண்டு பிடிப்பாளராக அடையாளம் காட்டியிருந்தது. க்யூபாவை அவர் தான் கண்டு பிடித்தார் என்று பெருமைப்படுத்தியிருந்தது. உண்மையில் என்ன நடந்தது? ஒக்ரோபர் 28. 1492இல் கொலம்பஸ் க்யூபா வந்து சேர்ந்தார். இத்தனை அழகிய தீவைக் கண்டதும் அதன் மேல் உண்மையில் அவர் தேடி வந்தது க்யூபா அல்ல. இந்தியாவை! இந்தியாவின் வளங்களை குறிப்பாக தங்கத்தை. க்யூபாவைக் கண்டதும் இந்தியாவைக் கண்டு பிடித்து விட்டதாகவே கொலம்பஸ் நினைத்துக் கொண்டார். சரி க்யூபாவைக் கண்டு பிடித்த பிறகு என்ன செய்தார்? உடனடியாக ஸ்பெயின் மகாராணிக்கு தான் கண்ட தீவை விலாவாரியாக விவரித்து கடிதம் எழுதினார். கொலம்பஸின் கண்டு பிடிப்பில் மகாராணி இசெபல்லா மயங்கிப் போனார். க்யூபாவை விட்டு வைக்கக் கூடாது என்று ஸ்பெயின் முடிவு செய்தது. 1511 ஆம் வருடம் டீகோ வெலாகுவே குலார் என்பவர் ஸ்பானியப் படைகளைத் திரட்டிக் கொண்டு க்யூபாவுக்குள் நுழைந்தார். க்யூபாவின் அரசஅதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் கொலம்பஸோடு இணைந்து பயணித்தவர். ஸ்பானிய ஆக்கிரமிப்பின் தொடக்கப்புள்ளி இது தான்.

காஸ்ட்ரோ கொலம்பஸை கண்டு பிடிப்பாளராக ஏற்றுக்கொள்ள மறுத்தார். கொலம்பஸ் இங்கே கால் வைப்பதற்கு முன்பே க்யூபா இருந்தது. இங்கு போதிய அளவு செல்வாக்குடன் மக்கள் வாழ்ந்தனர். கொலம்பஸ் அதைக் கண்டு பிடிப்பதெப்படி? கொலம்பஸ் இங்கே கால் வைத்திருக்கலாம். அவ்வளவு தான் . அமெரிக்காவும், ஐரோப்பாவும் பரஸ்பரம் கண்டு கொண்டது என்று வேண்டுமானால் சொல்லலாம். அதே போல் ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களின் செயல் கண்டுபிடிக்கப்பட்டது என்று வேண்டு மானால் சொல்லலாம் என்றார் காட்டமாக.

கொலம்பஸ் க்யூபாவில் மயில் பார்ப்பதாகவும் குயில் பார்த்ததாகவும் மாய்ந்து மாய்ந்து எழுதினார். ஆனால் அங்கிருந்த மனிதர்களைப் பற்றிக் கவலைப்பட்டாரா? கிடையாது. கொலம்பஸ் க்யூபாவில் கால் பதித்த போது அங்கு க்யூபப் பழங்குடியினர் வாழ்ந்து வந்தனர். குறிப்பாக இரண்டு பிரிவினர் டைநோசிஸ் மற்றும் சிமோனிஸ் கொலம்பஸ் கண்டு பிடிப்பதற்கு முன்பே இவர்கள் பரம்பரை பரம்பரையாக க்யூபாவில் வாழ்ந்தவர்கள். வேண்டு மானால் இவர்களை கண்டுபிடிப்பாளர்களாக அறிவிக்கலாம்.

(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 673



**மேலிருந்து கீழ்**

1 - வழமையாக அமைந்த போக்கு.
2 - நீரில்லாமல் தாவரங்களுக்கு ஏற்படும் பாதிப்பு.
3 - கூடிக்குலாவும் செயற்பாடு.
4 - பளபளப்பு குறைந்த திறன்.
5 - தகுதியானதாகக் கொள்ளல்.
6 - நிலத்தை நோக்கி உடலை வளை.
8 - பக்கம்.
10- கல்யாணம்.
12- தொடக்கம்.
13- பாடலையும் இயற்றியவனையும் குறிக்கும்.
14- விருட்சம்.
15- பரி.
16 - மன்னார், வவுனியா. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் சேர்ந்த பகுதி.
17 -இது ஓய்வதில்லை.
18 - தாயின் சகோதரர்.

**இடமிருந்து வலம்**

1 - தாவரங்களில் நுண்ணிய துளைகள் மூலம் நிகழ்வது.
4 - நீரை சீராக வெளியேற்ற ஏற்படுத்தப்படும் அமைப்பு.
7- பாட்டு.
8 - தமிழ் மாதம் ஒன்று.
9 - மேலை நாடுகளின் கடும் போக்குக் குணம்.
11 - அருந்துதல்/ குடித்தல்.
13- தோடு.
14 - ஒரு குறியீடு.
15 - பூமி.
16 - வருகை என்பதற்கான எதிர்காலப்பதம்.
17 - மாமனை இவ்வாறும் அழைப்பர்.
19 - மாத்திரை.
20 - அரசர்களால் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தர்மம்.

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:------------------------------------

------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 673

■ சொற்சிலம்பம் போட்டி 673ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 03 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜீன் 10 மற்றும் ஜீன் 17 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 670இல் பரிசு பெற்றோர்

1. ச.அன்ரனி, புதுக்குளம், கனகராயன்குளம் தெற்கு, கனகராயன்குளம்.
2. செனமினி பாலசந்திரன், கொட்டாவத்தை, கல்வளை, சண்டிலிப்பாய்
3. சி.இராசரத்தினம், பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

அ.ஸ்ரீஸ்கந்தராஜா,
இல 15/11,புவனேஸ்வரி அம்பாள் வீதி
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

எஸ்.சி.செல்வன்,
மே/பா ராசநாயகம்,
சோறன்பற்று,
பளை.

இ.விஜயபாலன்,
இல 7,நவீனசந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தட்சிகா தருமராஜா,
இல 43, கலைவாணி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

க.பொ.இ.குலசிங்கம்,
5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

### சொற்சிலம்பம் போட்டி 671இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சுபாவம்.
2.வாக்கு.
3.சகிப்பு.
4.கத்தரி.
5.முதுகு.
9.புத்தன்.
11.திராவிடம்.
13.திரை.
14.மாதவன்.
16.சட்டம்.
17.ஆகுதி.
18.வளை.
19.குண்டு.

**இடமிருந்து வலம்**

1. சுவாசம்.
4. கமுகு.
6. பாக்கி.
7. பத்து.
8. வகுப்பு.
10. தகுதி.
12. புத்தி.
15. தரை.
16. கவி.
17. ஆதவன்.
19. குட்ட.
20. குவளை.
21. பண்டம்.
22. தின்.
23. வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிங்கப்பூர் தனி நாடான பிறகு 1969இல் ஒருமுறை இனக்கலவரம் நடைபெற்றது. ஆனால் இதன் தொடக்கம் உண்மையில் சிங்கப்பூரில் நடக்கவில்லை. மலேசியா நாட்டில் நடைபெற்ற ஒரு நிகழ்வின் எதிரொலிதான் இது.

மலேசியாவில் உள்ள கோலாலம்பூர் மற்றும் பெடலின் ஜெயா ஆகிய பகுதிகளில் தொடங்கியது அந்தக் கலவரம். பொதுத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் மலேசியாவில் வசித்த சீனர்களுக்கும் மலாய் மக்களுக்குமிடையே கலவரம் உண்டானது. இதில் 196 பேர் இறந்தனர். அவசர நிலைச் சட்டத்தை அவசரமாக அறிமுகப் படுத்தியது மலேசிய அரசு. 1971 வரை பாராளு மன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தது.

இதெல்லாம் நடந்தது மலேசியாவில்தான். ஆனால் சிங்கப்பூரிலும் சீனர்களும், மலேய மக்களும் அதிகம் இருந்ததால் அந்தக் கலவரத்தின் தாக்கம் சிங்கப்பூரிலும் வெடித்தது. ஏற்கனவே மலாய் மக்களின் தேசியக் கூட்டமைப்பு (UMNO), சிங்கப்பூரில் மலாய் இன் மக்களுக்கு அதிக முக்கியத்துவம் கிடைக்க வேண்டும். நாங்களே மண்ணின் மைந்தர்கள் என்று

**1819 காலகட்டத்தில் மலாய் மக்களைவிட இந்தியர்களின் மக்கள் தொகை சிங்கப்பூரில் அதிகமானது. அப்போது அந்த நாட்டில் வசித்த இரண்டாவது பெரும் இனம் என இந்தியர்கள் ஆயினர். 1860இல் மக்கள் தொகையில் 16 சதவிகிதம் இந்தியர்கள்தான். பின்னர் படிப்படியாகக் குறைந்து 1980இல் இது வெறும் 6.4 சதவிகிதம் என்று ஆனது.**

அறிவித்திருந்தார்கள்.

சிங்கப்பூரில் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த சீனர்களுக்கு இது வெறுப்பைத் தந்தது. ஆனால் சிங்கப்பூரில் வசித்த மலாய் மக்களுக்கோ தாங்களே பூமி புத்திரர்கள். எனினும் தங்களது இனம் பொருளாதாரத்தில் மேம்படவில்லை என்ற வருத்தம் ஆழமாகவே இருந்தது. மலேசியாவில் மலாய் இன மக்கள் சீனர்கள் மீது பல கொடுமைகளைப் புரிகிறார்கள் என்ற தகவல் சிங்கப்பூரில் பரவியது. சிங்கப்பூரின் 'டென்ஷன்' அதிகமானது.

சிங்கப்பூரிலும் கலவரங்கள் வெடித்தன. காவல்துறை வேகமாகச் செயல்பட்டது. ஆனால் இந்தக் கலவரத்தில் 36 பேர் இறந்தனர். 500 பேருக்கு பலத்த காயங்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திர சிங்கப்பூரில் நிகழ்ந்த கலவரத்தில் இந்தியர்கள் குறிப்பாக தமிழர்கள் பங்கு கொண்டனர்.

1819 காலகட்டத்தில் மலாய் மக்களைவிட இந்தியர்களின் மக்கள் தொகை சிங்கப்பூரில் அதிகமானது. அப்போது அந்த நாட்டில் வசித்த இரண்டாவது பெரும் இனம் என இந்தியர்கள் ஆயினர். 1860இல் மக்கள் தொகையில் 16 சதவிகிதம் இந்தியர்கள்தான். பின்னர் படிப்படியாகக் குறைந்து 1980இல் இது வெறும் 6.4 சதவிகிதம் என்று ஆனது. இதற்குப் பலகாரணங்கள்.

1970க்களில் பிரிட்டிஷ் இராணுவம் இங்கிருந்து பின்வாங்கியது. இதன் காரணமாக அதில் பணியாற்றிக் கொண்டிருந்த பல இந்திய சிப்பாய்கள் வெளியேறினர். தவிர வேலை தேடி சிங்கப்பூருக்கு வந்தவர்கள் தங்கள் முதிய பருவத்தில் இந்தியாவிலுள்ள தங்கள் குடும்பத்தினரிடம் திரும்பினர். 1965இல் சிங்கப்பூர் அரசு அறிமுகப்படுத்திய கட்டுப்பாடுகள் காரணமாகவும் இந்தியர்களின் கொத்து கொத்தான குடியேற்றம் முடிவுக்கு வந்தது. மேலும் சிங்கப்பூரில் வசித்த இந்தியர்களில் கணிசமானோர் மேலை நாடுகளுக்குச் செல்லும் போக்கு அதிகரித்தது.

சிங்கப்பூரில் வசிக்கும் இந்தியர்களில் எண்பது சதவீதம் பேர் கல்வி அறிவு இல்லாதவர்கள். கூலி வேலை செய்பவர்கள். துறைமுகப்பணி, கட்டுமானப் பணி மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் பணிபுரிகிறார்கள்.

இந்தியர்கள் செறிவாக விளங்கும் சிங்கப்பூர் பகுதி லிட்டில் இந்தியா. இந்தப் புகுதி நரட்டில் சற்றுத் தள்ளி இருந்தாலும் சிங்கப்பூர் மெட்ரோ ரயில் போக்குவரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ரேஸ்கோர்ஸ் சாலைக்கும், செராங்கூன் சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள லிட்டில் இந்தியா, சென்னை மாதிரியே காட்சியளிக்கிறது. குலோப்ஜான் கடை, மெஹந்தி கடை இவற்றுடன் பிரம்மாண்டமான முஸ்தஃபா பல்பொருள் அங்காடி 24 மணி நேரமும் திறந்துள்ளது.

கோமள விலாஸ், முருகன் இட்லி கடை, சரவணபவன், ஆனந்த பவன், அஞ்சப்பர் போன்ற தமிழகத்தின் பிரபல உணவகங்களை லிட்டில் இந்தியாவில் காணலாம்.

லிட்டில் இந்தியா பகுதி கொஞ்சம் நெருக்கமாகத்தான் இருக்கும். குறைவான வாடகையில் வீடு கிடைக்கும் என்பதால் நகரின் பிற பகுதிகளில் இருப்பவர்கள்கூட இங்கு தங்குவதுண்டு. இந்தியா, பங்களாதேஷ் நாடுகளிலிருந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பகுதியில் தங்குகிறார்கள். 2013 டிசம்பர் 8 அன்று இந்தப் பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்வு சிங்கப்பூர் அரசுக்கும், அந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்குமிடையே ஒரு பிளவை ஏற்படுத்தியது.

பேருந்து ஒன்றில் ஏறும்போது தமிழ்த் தொழிலாளி ஒருவர் கீழே விழுந்து சக்கரங்களில் மாட்டி உயிரிழந்தார். 33 வயதான சக்திவேல் என்ற இந்த இளைஞர் சிங்கப்பூரில் கட்டுமானப் பணி செய்து வந்தவர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் வசிக்கும் சுமார் 300 இந்தியத் தொழிலாளிகள் வீதிக் கலவரத்தில் ஈடுபட்டனர். பங்களாதேஷைச் சேர்ந்த தொழிலாளிகளும் இதற்கு ஆதரவு அளித்தனர்.


சிங்கப்பூர் அரசு ஒரு பெரும் பொலிஸ் பட்டாளத்தை அங்கு அனுப்பியது. கலவரத்தில் ஈடுபட்டவர்கள் போதையில் இருந்தார்கள் என்றும், பியர் போத்தல்களை தங்களை நோக்கி விசிறி எறிந்தார்கள் என்றும் காவல்துறை கூறியது. அம்புலன்ஸ் ஒன்றுக்குத் தீவைத்தனர் கலவரக்காரர்கள்.

27 பேரைக் கைது செய்தது காவல்துறை. அடுத்து வந்த நாள்களில் மேலும் 9 தொழிலாளிகள் கைது செய்யப்பட்டனர். 2014 பெப்ரவரி 10 அன்று வெளியான தீர்ப்பின்படி இவர்களில் ஒரு தொழிலாளிக்கு 15 வார சிறை தண்டனை அளிக்கப்பட்டது. கலவரங்கள் குறித்து விசாரிக்க குழு ஒன்றை அமைத்தது அரசு. விபத்தில் பங்கு கொண்ட பேருந்தின் ஓட்டுநர் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

கலவரத்தில் ஈடுபட்ட அத்தனை பேரும் சட்டத்திற்கு முன் கொண்டுவரப்படுவார்கள் என்ற அறிவித்தார் சிங்கப்பூர் பிரதமர் லீ ஸீன் லூங். சிங்கப்பூரில் வசித்த சீனர்கள் மற்றும், மலாய்காரர்கள் சிலர் இந்தத் தமிழர்களே இப்படித்தான் என்பது போன்ற விமர்சனங்களை உதிர்க்க; நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட அரசு வெளிநாட்டிலிருந்து வந்து சிங்கப்பூரில் வேலை செய்யும் தொழிலாளிகளைப் பற்றிய எந்தவித விமர்சனமும் கூடாது என்றது.

லிட்டில் இந்தியா பகுதியில் மது விற்பனைக்கும், மது அருந்துதலுக்கும் தாற்காலிகத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை 2014 ஜூன் 24 வரை அமுலில் இருந்தது.

(இன்னும் வரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்கள் நேர்மையான பொலிஸ்

சர்ச்சைகளில் சிக்குவது அசினுக்குப் புதிதல்ல. தற்போது மும்பையில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது எனும் இடத்தில் காரை நிறுத்தியதால், மும்பை பொலிஸ் அசினின் காரைப் பூட்டிவிட்டு சென்று விட்டார்களாம். அவர் ஒரு நடிகை என சலுகை ஏதும் வழங்காத பொலிஸ், 15 நிமிடக் கெஞ்சலுக்குப் பிறகு காரை கொடுத்தார்களாம். இதில் முக்கியமான விஷயம் நிறுத்தியிருந்த காருக்குள்தான் அசினும் இருந்தாராம்.



# கார்த்திக்கு பாராட்டுகள்

மெட்ராஸ் படத்தில் வட சென்னை இளைஞராக நடித்த கார்த்திக்கு பாராட்டுகள் குவிந்தன. தற்போது அவர் நடித்துவரும் காஷ்மோரா படத்தின் முக்கிய காட்சிகள் வட சென்னையில்தான் படமாக்கப்பட்டு வருகின்றன. அண்ணன் சூர்யா நடிக்கும் மாஸ் போலவே இந்தப் படமும் அமானுஷ்யங்கள் நிறைந்த படமாக உருவாகி வருகிறதாம். மாஸ்ல அண்ணனோட ஜோடி நயன்தாரா தான் இவர் தான் தம்பிக்கும் ஜோடி.



# தடுமாற்றத்தில் தரணி

ஐ படத்துக்கு முன்பே தன் நண்பன் இயக்குநர் தரணியின் ராஸ்கல் படத்தில் நடிக்கவிருந்தவர் விக்ரம். இந்த நிலையில் பத்து என்றதுக்குள்ள படத்தை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று தரணியிடம் உறுதியளித்த விக்ரம் அதையும் காற்றில் பறக்கவிட்டு, ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் நடிக்கவிருப்பதால் தடுமாற்றத்தில் உள்ளார் தரணி.


# எத்தனை பெண்கள்

அரண்மனை வெற்றி பெற்றதால் அதன் இரண்டாம் பாகத்துக்கான வேலைகளில் தீவிரமாக இருக்கிறார் சுந்தர்.சி. சித்தார்த் நாயகனாகவும், த்ரிஷா நாயகியாகவும் நடிப்பதாக குஷ்பு தெரிவித்துள்ளார். தற்போது இன்னொரு நாயகியாக முதல் பாகத்தில் பேயாக வந்த ஹன்சிகாவையும் சேர்த்திருக்கிறார் சுந்தர்.சி. இது தவிர இன்னொரு நாயகியாக நடிக்க காஜல் அகர்வாலிடம் பேசி வருகிறார். எத்தனை பொண்ணுங்களோ அத்தனை பேய்கள்!



# நிராகரிக்கப்பட்ட வேண்டுகோள்

விஸ்வரூபம், விஸ்வரூபம் 2, உத்தம வில்லன் என கமல்ஹாசனுடன் தொடர்ந்து மூன்று படங்களில் நடித்து, கமலின் குட் புக்கில் உள்ளவர் ஆண்ட்ரியா. இந்த நிலையில் கமல் அடுத்து பொலிஸ் அதிகாரியாக நடிக்கவிருக்கும் ஓர் இரவு படத்தில் த்ரிஷா நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் படத்தின் இரண்டாவது நாயகி வேடத்தில் நான் நடிக்கிறேன் என்ற ஆண்ட்ரியாவின் வேண்டுகோளை நிராகரித்து விட்டாராம் கமல்.





36...

எப்...

கல்லூரியில் படி
திருமணத்துக்குப்
ஒருகட்டத்தில் தல்
தன்னைக் கண்ட
வேலைகேட்டுப்
உட்கார்ந்திருக்கும்
ரிகஅக்கறையாக
பணிவிடை செய்
சகஊழியர்களைப்
அப்பாவியாக என
என் பொண்ணு
தோழியிடம் வந்
கேட்டுக் கண்ணீ
வசந்தியின் க
மனைவி மீது அ
அவரைப் பயன்ப
ஜோதிகாவின் பெ
பிரதிபலிக்கிறார்.
இண்டர்நெட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6 வயதினிலே படம்
# ப்படி?

படிக்கு காலத்தில் எதையும் துணிச்சலுடன் எதிர்த்துப் போராடுகிற பெண், குப் பிறகு குடும்பம் குழந்தை என்றாகி தன்னையே தொலைத்துவிடுகிறார். தன்னை இழந்துவிட்டதை உணரும் அந்தப்பெண் 36 வயதினில் மீண்டும் ண்டடைவது எப்படி? என்பதுதான் இந்தப்படம்.

டுப் போன இடத்தில் கொட்டாவி விட்டுக்கொண்டு அசிரத்தையாக க்கும் ஜோதிகா படம் முழுக்க, தான் ஏற்றிருக்கும் வசந்தி பாத்திரத்தில் பாக நடித்திருக்கிறார். ஒரு சோம்பேறியாக, கணவன் மற்றும் குழந்தைக்குப் செய்வதையே பெருமையாகக் கருதும் குடும்பத்தலைவியாக, அலுவலகத்தின் ளைப் பற்றி புறம் பேசுபவராக, குடியரசுத்தலைவரைப் பார்த்ததும் மயங்கிவிழும் என எல்லா இடங்களிலும் சிறப்பாகச் செய் ிருக்கிறார் ஜோதிகா.

ணும் வசந்தி மாதிரி ஆகிவிடக்கூடாது என்று கணவன் ரகுமான் சொன்னதற்காக வந்து, அப்படின்னா இவ்வளவு வருசமா நான் என்னவா? இருந்தேன் என்று ணீர்விடும் காட்சியில் கலங்கவைத்துவிடுகிறார்.


கணவர் தமிழ்ச்செல்வனாக நடித்திருக்கிற ரகுமான், அளவாக நடித்திருக்கிறார். அக்கறை கொண்டவர் போலவே காட்டிக்கொண்டு தம்முடைய தேவைகளுக்காக ன்படுத்திக்கொள்ளும் கணவன் பாத்திரத்தைச் சரியாகச் செய்திருக்கிறார்.

பெண்ணாக நடித்திருக்கும் அமிர்தா, அந்தவயதுக்குரிய குழந்தைகளைப் ார். அவருடைய பாத்திரப்படைப்புதான் விஜியின் வசனத்தில் சொல்வது போல, டில் பழுத்ததாக இருக்கிறது.

[illegible]

## தொடங்கியது படப்பிடிப்பு

பாலா தயாரிப்பில் சண்டி வீரன் படத்துக்காக வாரிசு நடிகர் அதர்வாவை இயக்கிவரும் சற்குணம் அந்தப் படம் முடிந்த கையோடு இன்னொரு வாரிசு நடிகரை இயக்குகிறார். அவர் நவரச நாயகனின் புதல்வர் கௌதம் கார்த்திக். கோபுரம் திரைக்கூடம் அன்புச்செழியன் தயாரிக்கும் இந்தப் படத்துக்கான வேலைகள் இப்போதே தொடங்கிவிட்டனவாம்.



## சந்தானத்தின் முடிவு

சந்தானம் இனிமே நாயகனாகவும், தனக்கு நெருக்கமானவர்களின் படங் களில் மட்டும் நகைச்சு வையாகவும் நடிக்க எடுத்த முடிவு ஒருவரை மிகவும் சந்தோஷப்படுத்தியுள்ளதாம். அவர் பரோட்டா சூரி. சந்தானம் நடிக்க இருந்த சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் படம், சிங்கம் 3, அரண்மனை 2 ஆகிய படங்களில் தற்போது நடிக்க இருப்பவர் சூரிதான். இன்னும் முக்கியமான படங் களும்கூட சூரியை நோக்கிப் போகின்றனவாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நேர்மையை விதையுங்கள்

ஒரு மிகப்பெரிய நிறுவனத்தின் முதலாளி தனக்கு வயதாகி விட்டதால் அவர் நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலை செய்யும் ஒரு திறமையா னவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். எல்லோரும் தன் அறைக்கு வருமாறு கட்டளை இட்டார்.

உங்களில் ஒருவர் தான் என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும், அதனால் உங்களுக்கு ஒரு போட்டி வைக்க போகிறேன். யார் வெற்றியடைகிறார்களோ அவர் தான் அடுத்த முகாமையாளர் என்றார்.

என் கையில் ஏராளமான விதைகள் இருக்கின்றன இதை ஆளுக்கு ஒன்று கொடுப்பேன். இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நட்டு, உரம் இட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக வளர்த்து அடுத்த வருடம் என்னிடம் காட்ட வேண்டும். யார் செடி நன்றாக வளர்ந்து இருக்கிறதோ அவரே என் கம்பனியின் பொறுப்பை ஏற்க வேண்டும் என் றார்.

அனைவரும் ஆளுக்கு ஒரு விதை வாங்கிச் சென்றனர். அந்த கம்பெனியில் வேலை செய்யும் ராமுவும் ஒரு விதை வாங்கிச் சென்றான். தன் மனைவியிடம் முதலாளி சொன்ன அனைத்தையும் சொன்னான். அவன் மனைவி தொட்டியும் உரம் தண்ணீர் எல்லாம் அவனுக்கு கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள்.

ஒரு வாரம் சென்றது. நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் ராமுவின் தொட்டியில் செடி இன்னும் வளரவே ஆரம்பிக்க வில்லை.

ஒரு மர்தம் ஆனது செடி வளரவில்லை, நாள்கள் உருண் டோடின .ஆறு மரிதங்கள் ஆனது .அப்பொழுதும் அவன் தொட்டியில் செடி வளரவே இல்லை. நான் விதையை வீணாக்கி விட்டேனா என்று புலம்பினான் ஆனால் தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவத்தை நிறுத்த வில்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் சொல்லவில்லை.

ஒரு வருடம் முடிந்து விட்டது எல்லாரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள். ராமு தன் மனைவியிடம் காலி தொட்டியை நான் எடுத்து போகமாட்டேன் என்று சொன்னான். அவன் மனைவி அவனை சமாதானப்படுத்தி நீங்கள் ஒரு வருடம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரி செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டிய தில்லை. நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். தொட்டியை எடுத்து சென்று முதலாளியிடம் காட்டுங்கள் என்றாள்.

ராமுவும் காலி தொட்டியை அலுவலகத்துக்கு எடுத்துச் சென்றான். எல்லார் தொட்டியையும் பார்த்தான் விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. இவன் தொட்டியை பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

முதலாளி எல்லாரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு சொன்னார். "அருமை எல்லோ ரும் செம்மையாக செடி யை வளர்த்து உள்ளீர்கள் .உங்களில் ஒருவர் தான் இன்று பொறுப்பு ஏற்றுக் கொள்ளபோகிறீர்கள்" என்றார். எல்லாருடைய செடியையும் பார்வை இட்டார். ராமு கடைசி வரிசையில் நின்றிருந்தான். அவனை அருகே வரு மாறு அழைத்தார்.

ராமு தன்னை வேலையை விட்டு நீக்கத்தான் கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே சென்றான். முதலாளி ராமுவிடம் "உன் செடி எங்கே என்று கேட்டார்" ஒரு வருடமாக அந்த விதைய்யை நட்டு உரமிட்டு தண்ணீர் விட்டதை விலாவாரியாக சொன்னான்.

முதலாளி "ராமுவை தவிர அனைவரும் உட்காருங்கள்" என்றார். பிறகு ராமு தோளில் கையை போட்டுகொண்டு "நமது கம்பனியின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறவர் இவர்தான்" என்றார். ராமுவுக்கு ஒரே அதிர்ச்சி தன் தொட்டியில் செடி வளரவே இல்லை பிறகு ஏன் நமக்கு இந்த பொறுப்பை கொடுக்கிறார் என்று குழம்பிப்போனான்.

சென்ற வருடம் நான் உங்கள் ஆளுக்கு ஒரு விதை கொடுத்து வளர்க்கச் சொன்னேன் அல்லவா அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள் Boiled seeds. அந்த விதைகள் அவிக்கப் பட்டதால் அது முளைக்க இயலாது. நீங்கள் அனை வரும் நான் கொடுத்த விதை முளைக்காததால் அதற்குப் பதில் வேறு ஒரு விதையை நட்டு வளர்த்துக் கொண்டு வந்தீர்கள். ராமு மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டான், ஆகவே அவனே என் நிறுவனத்தை நிர்வகிக்க தகுதியானவன் என்றார்.

நாம் சொல்லும் சொல் நாம் பயணிக்கும் பாதை நேர்மையாக இருந்தால் வெற்றிகள் நம்மைத் தேடி வரும்...!

வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான். உண்மையும் நேர்மையும் தர்மத்தை பாதுகாக்கும், நேர்மை ஒரு போதும் வீண்போகாது. நேர்மை யை விதையுங்கள். பதவியும் பணமும் தேடிவரும்.

## இளநீர்

தென்னை மரத்து இளநீரு -நல்ல
தேன்போல இனிக்கும் சுவைநீர்
என்றும் எங்கும் கிடைத்திடுமே -தினம்,
ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!

பானத்தில் இளநீர் அரியவகை -எந்த
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை -இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை.

இயற்கை தந்தது இளநீரு -நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே -நம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே!

கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே -நம்
அனைவரின் தாகம் தீர்த்திடுமே!
அனைவரும் நாளும் குடித்திடலாம் -வரும்
ஆனந்தம்,தனிலே திளைத்திடலாம்!



## பறவைகள்

- ஆஸ்திரேலியாவில் வசிக் கும் மித்ரா என்ற் பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.
- நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.
- ஒரே சமயத்தில் அதிக முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.
- மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.
- வெட்டுக் கிளியை வேட்டை யாடும் பறவை மைனா.
- வான்கோழிகள் அமெரிக் காவை பூர்வீகமாகக் கொண்டவை.
- நியூசிலாந்து நாட்டில் காக்கைகளே கிடையாது.







## வர்ணம் தீட்டுவோம்



கவாலி : ஏன் சோகமாக இருக்கிறீர்?

சிவாஜி:- நான் செல்லமா வளர்த்த நாய் காணாமல் போயிடுச்சு.

கவாலி : பத்திரிகையில் விளம்பரம் கொடுக்க வேண்டியது தானே!

சிவாஜி:- கொடுக்கலாம். ஆனா என் நாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடல்

மறவாத குரலிசையில்
மனசுக்குள் மன்மதனாய்
உருவம் தெரியாத அழகில்
அழைத்தாய்
தொலைபேசியில்
தெரியாத இலக்கத்தில்
இன்று காரணம்
தெரியாமலேயே
அழைப்பினை
நிறுத்தி விட்டாய்
தேடுகின்றேன் எங்கும்
உன் குரலிசையை
உன் முகம் காண...
காணும் வரை என்
தேடல் தொடரும்

யோ. யாழினி,
பரந்தன்



# உறைந்த நினைவுகள்

மலரென்று உனை எண்ணி
மனதினில் வைத்திருந்தால்
பிரிவென்றுவரும்போது
பெருந்தணலாய்ச் சுடுகின்றாய்
கூடி இருக்கையிலே
குளிர்நிலவாய்த்தானிருந்தாய்
யிலிஸைபக்கம் இல்லாது
பகலவனை மிஞ்சுகின்றாய்
கோடைகாலங்கள்
இன்னல் பல தருகையிலே
வசந்தமாக உன் நினைவு
வந்து வந்து போகின்றது
காரிருள் என் மீது
கவிழ்ந்து கிடக்கையிலே
விளக்காக வெளிச்சம்
தந்து வேறெங்கோ நீ
மலரோடு மரங்கள்
அழகாகத்தானிருக்கும்
வேர்கள் இல்லையெனில்
அது விறகாகிப் போயிருக்கும்
உன் நினைவு
எப்போதும் எனக்குள்ளே
உறைந்திருக்கும்
அது சுத்தமான
காற்றாகி என் சுவாசம்
நிறைந்திருக்கும்

# அவதாரம்

கண்ணே கனிரசமே என்றீர்
கை படாத ரோசா என்றீர்
விண்ணில் தவழும் வெண்ணிலவே என்றீர்
சித்திர அழகுப் பதுமையே என்றீர்

அன்ன நடை அழகே என்றீர்
ஆடி வரும் மயிலே என்றீர்
என்னென்னவோ சொல்லி உமது
இச்சைக்கு இரை தேட முனைந்தீர்

பெண் பார்க்க வந்த வேளை - உமது
பேடித்தனம் புரிந்து கொண்டேன்
என்னை நீர் வர்ணிக்கவில்லை
என் உடலை அலங்கரிந்த
பொன் நகையை என்று

சீதனப் பிசாசால் சிறைப்பட்ட உம்மை
சேர்ந்து வாழ்வதற்கு சிறகு சிக்காத
பறவைக் குஞ்சல்ல நான்

பாரதியார் கண்ட புதுமைப் பெண்
பகுத்தறிவு பெற்ற மங்கை
பாருக்கே ஆதாரமான பராசக்தி

மாயா

# விதவை

மௌனங்களுடன்
தினமும் ஓர்
வெள்ளைப் புறா
என் விழிகளை
கடந்து செல்கின்றது


ரணம் நிறைந்த
மனசுடன் தினம்
போராடும் வீதியோர
வேடர்களுடன்

காமம் கலந்த
கள்ள சிரிப்புடன்
கடைக்காரன்
தடையுடைத்து
பறக்கின்றது

ஏரிசலையுடன்
அள்ளிப்போடும்
காய்கறிக்காரன்
கண்ஜாடையில்
கட்டில் காட்டுகின்றான்

ஒற்றைப் புறா
சுற்றிலும் வேடர்கள்
இருப்பினும் சில இதயங்களை
அந்த விதவையின்
கண்ணீர் ஈரமாக்குகின்றன

சிலை



# விதி

நமக்கென்று எழுதப்பட்ட
விதியை யாராலும் மாற்ற
முடியாது என்று சொல்லிக்கொண்டு
மடயனாய் சுற்றித் திரிவதை விட!!!

எனக்கென எழுதப்பட்ட விதியை
எவ்வளவு பெரிய தடைகளனாலும்
தாண்டி வந்து தகர்த்து வெல்வேன்
என்று போராடு..!!!

நம் விதியை நிர்ணயிப்பது நாம்
தான் என்று புரியும்!!!

வைதேகி

கோரம்

உன்னை நானும்
என்னை நீயும்
விழுங்கிவிடுவதாய்க் கருதிய
எச்சரிக்கையின் இறுக்கங்களை
நம் முகங்களில் படரவிட்டு
ஒருவரையொருவர் நம்பாமலேயே
ஒரு நீண்ட பயணம் முடித்து
விரோதத்திற்கும்
நட்பிற்கும் இடையே
நாம் விலகிநின்று
பரஸ்பரம் சிரித்துக் கொள்கையில்
கூடவே நம்மைப் பார்த்து
கைதட்டி சிரித்துப் போகும்
நாம் நழுவவிட்ட காலங்களும்!

—யாரோ—

சிலைக்



# புலம்பல்கள்

செய்யவழி ஏதுமில்லை
துயரவலி அயரவில்லை
கேடு எங்கள் விரல்களில் !

உய்யவழி எதுவுமில்லை
உயரவழி தெரியவில்லை
நாடு அவர்கள் கைகளில் !

சீலைகள் கிழித்து
தாவணி செய்யும்
தாய்மார் தவிப்பு யாரறிவார் ?

வேலையை செய்தும்
எலிக்கறி தின்னும்
ஏழையின் பசியை யாரறிவார் ?

பட்டங்கள் வென்றும்
வாழ்வினை இழந்து
நிற்கின்ற இளைஞர்
என்செய்வார் ?

திட்டங்கள் உண்டு
சட்டங்கள் உண்டு
விடியலின் திறவுகோல்
எங்குண்டு ?

ஆடி போய் ஆவணி வந்ததும்
ஆட்டிப்படைக்க–
பாதைகள் தோறும் சனிவரும் !

வாடிப் போய் காலணி தொட்டும்
வாட்டியெடுக்கும்–

வைதேகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- நந்தன்**

இலங்கை, சோல்பரி யாப்பின் பிரகாரம் 1948 களில் சுதந்திரமடைந்த போதிலும், சிறுபான்மை இனத்தவர்களாக இருந்த இலங்கைத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் தமது அரசியல் எதிர்காலம் குறித்து தீர்க்க தரிசனம் அற்றவர்களாகவே செயற்பட்டனர். ஆனால் சிறுபான்மையினர்களாக இருந்த முஸ்லிம் சகோதரர்களின் தலைவர்கள் கொள்வதற்காக தமிழர்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பக் கூடிய வகையில் தம் அரசியல் மேடைகளில் உணர்ச்சி பூர்வமான பேச்சுகளையும், பாடல்களையும் பாடி எழுச்சி கொள்ள வைத்து தமது அரசியல் ஸ்தானத்தை நிலை நிறுத்திக் கொண்டனர்.

தந்தை செல்வா ஒரு அரசியல் வாதியாக மாறாமல் ஒரு ஆன்மீகத் தலைவராக மாறியிருந்தால் ஒரு சிறுபான்மையினர் எதுவுமே பெற்றுக் கொள்ள முடியவில்லை. மறைந்த தலைவர்கள் இராஜமாணிக்கம், இராஜவரோதயம் போன்றவர்கள் தந்தை செல்வாவுடன் இணைந்து நின்ற போதும் தமிழர்களுக்கென எந்த அர்த்தமுள்ள, பயன்விளைக்கும் உரிமையையும் கிடைக்காது என்ற நிலையே ஓங்கி, உயர்ந்து வளர்ந்துள்ளது. முன்னெடுத்தார்.

அதன் பயனாக இன்று முஸ்லிம் சமூகத்தினரில் பலர் நீதிபதிகளாகவும் கல்வி அதிகாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் வைத்தியர்களாகவும் திகழ்கின்றனர்.

தமிழர்களாகிய சிறுபான்மையினரிடையே இத்தகைய தலைவர்கள் தோன்றவில்லை.



# தமிழர் அரசியல் தலைவிதி மாறாதா...?

பெரும் பான்மையினத்தவர்களோடு இணைந்து தமது அரசியல் அபிலாசைகளையும் தம் இனத்தவர்களுக்கான சமூக அந்தஸ்தினையும் படிப்படியாகப் பெற்றுக் கொண்டனர்.

சுதந்திரத்துக்கு முன்னர், இலங்கை வாழ் தமிழர்களுக்கு ஒரு சரியான தலைமைத்துவம் கிடைக்காமையே, இன்று வரையும் நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்குக் காரணமாயின.

பெரும்பான்மையினருக்கு D.S.சேனநாயக்க C.W.W கன்னங்கரா போன்ற தலைவர்கள் தோன்றினர். 1948களின் பின்னர் பெரும்பான்மையினத்தவர்கள் சிறுபான்மையினத்தவர்களை அணைத்துக் கொண்டு செல்ல மாட்டார்கள் எனப் பெற்ற பட்டறிவின் பயனாகவே சிறுபான்மையினர் தமக்கென அரசியல் கட்சியினை ஸ்தாபித்தனர்.

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும் தனிச்சிங்களச் சட்டம் இயற்றப்பட்ட போதும் எமது தமிழ்த் தலைவர்கள் சிலர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். அதன் காரணமாக இணைந்திருந்த வேறு சில தலைவர்கள் பிரிந்து சென்று வேறு புதிய அரசியல் கட்சிகளை நிறுவினர்.

ஆனால் எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியும் சாணக்கியமாக தூர நோக்குடன் தமிழ் மக்களை வழிநடத்திச் செல்லவில்லை. தமது அரசியல் நிலையைத் தக்க வைத்துக் சிறந்த ஆயராகவோ அல்லது உயர்நிலைப் பதவியில் நிலை நிறுத்தப்பட்டிருப்பார்கள்.

சிறந்த சட்டத்தரணியான ஜீ.ஜீ. பொன்னம்பலம் பெரும்பான்மைத் தலைவர்களை நம்பி அவர்களுக்குத் துணையாக இருந்து செயற்பட்டு இறுதியிலேயே தாம் மோசம் போய் விட்டதை உணர்ந்து வெளியேறினார். சிறுபான்மையினருக்காகக் குரல் கொடுத்த இடதுசாரி இயக்கங்கள், காலப்போக்கில் தம் கொள்கைகளை மாற்றி தேய்ந்து போய்ப் பெரும்பான்மையினர் என்ற பேதத்தை வெளிப்படுத்தினர். இன சமூகங்களுக்கிடையிலே முரண்பாடுகள் ஏற்பட்ட பொழுதுபெரும்பான்மையினர் எல்லோரும் ஒற்றுமையாகினர். ஆனால் சிறுபான்மையினர் பிரிந்தே நின்றனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்ட போது சிறுபான்மையினர் எதிர்த்தே வாக்களித்தனர். அனைத்து சிறுபான்மையினரும் ஒன்றிணைந்தே நின்றனர்.

13ஆவது அரசியல் திருத்தம் எனக் கொண்டு வரப்பட்ட ஜே. ஆர். ராஜீவ்காந்தி உடன்படிக்கை, சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசியல் திட்டத்தில் பெருமளவான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும் பெரும்பான்மையினராலும் சிறுபான்மையினராலும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. அண்ணன் அமிர்தலிங்கம் காலத்திலும் தம்பி பிரபாகரன் காலத்திலும் கூட

பழைய மேளங்களுக்குப் பதிலாக, புதிய மேளங்கள் களத்தில் குதித்து, எம்மக்களின் பிரிக்க முடியாத உரிமைகளைக் கவர்ந்து இழுக்க வழிசெய்ய வேண்டும்.

1972இல் தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறியது. அது ஒரு சிறந்த பயன் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்த போதெல்லாம் தமிழர்கள் இழந்தவைகளே அதிகம்.

13ஆவது திருத்தத்தின் மூலமும் தமிழர்கள் பயனடையவில்லை. இப்போதைய 19ஆவது திருத்தம் எனச் சொல்லப்படுவதன் மூலமும் தமிழர்களுக்கு எந்த வித பயனும் கிடைக்கப்போவதில்லை. 13ஆவது

**எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சியும் சாணக்கியமாக தூர நோக்குடன் தமிழ் மக்களை வழிநடத் திச் செல்லவில்லை. தமது அரசியல் நிலையைத் தக்க வைத்துக் கொள் வதற்காக தமிழர்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பக் கூடிய வகையில் தம் அரசியல் மேடைகளில் உணர்ச்சி பூர்வமான பேச்சுகளையும், பாடல்களையும் பாடி எழுச்சி கொள்ள வைத்து தமது அரசியல் ஸ்தானத்தை நிலை நிறுத்திக் கொண்டனர்.**

தரும் செயற்பாடாக மலரவில்லை. ஓட்டப் பந்தயத்தில் கடைசி முடிவு வரை ஓடி முடிக்க வேண்டும். வெற்றி தோல்வி பெரிதல்ல.

முஸ்லிம் சமுகத்தினர் வர்த்தக ரீதியில் தமது பொருளாதாரத்தை உயர்த்தி ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் தம்மை நிலை நிறுத்திய வேளையில் கல்வி அமைச்சராக வந்த பதீயுதீன் மஹ்முத் கல்வியில் தமது சமூகம் முன்னேற வேண்டுமெனப் பல காத்திரமான நடவடிக்கைகளை திருத்தத்துக்கு என்ன ஆயிற்றோ, அதுவே 19 ஆவது திருத்தத்துக்கும் ஆகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவோ தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவோ இன்றைய நிலையில் சரியான தீர்க்க தரிசனமான முடிவை எடுத்தாலன்றி தமிழருக்கு அப்பழுக்கற்ற ஆட்சி அதிகாரம் கைக்கு வருமா என்பது நீண்டகாலத்துக் கனவாகவே முடியும்...!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

**20.04.2015 ~26.05.2015**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

பிரிந்த சொந்தங்கள் ஒன்று சேரும். உடன் பிறந்தவரால் உதவி உண்டு. வாகனம் இயக்கும் போது கவனம் தேவை. புத்திரர்களின் சொல்லும், செயலும் மாறுபடும் என்பதால் புரிந்து கொள்ள முடியாமல் தவிப்பீர்கள். இல்லறத்துணை மதிப்பு, மரியாதை தருவார். தொழில், வியாபாரத்தில் போட்டியை சமாளித்து விடுவீர்கள். பணியாளர்களுக்கு, வேலையில் கவனம் தேவை.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

அதிக விலையுள்ள பொருட்களை, கவனமாக பாதுகாக்கவும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. புத்திரர்கள், செயல்களில் நன்மை பெற உதவுவர். விருந்து, விழாக்களில் கலந்து கொள்வீர்கள். இல்லறத்துணையுடன் இணக்கமான போக்கு இருக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பெற, கடுமையாக பாடுபட வேண்டி வரும். பணியாளர்களுக்கு, வேலைப்பளு அதிகரிக்கும்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சொத்து சம்பந்தமான ஆவணங்களை, பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். புத்திரர்கள், உங்கள் சொல் கேட்டு நடந்துகொள்வர். உடல்நிலை ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி, உபரி பணவரவு உண்டு. பணியாளர்கள், திறமையை வெளிப்படுத்தி பணபலன் பெறுவர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். வழக்கு விவகாரங்கள் சுமுகத் தீர்வுக்கு வரும். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் இடையூறு அணுகாத பாதுகாப்பான சூழல் இருக்கும். பணியாளர்கள், ஊக்கத்தொகை பெறுவர். பெண்கள், வீட்டை அழகுபடுத்த, கலையம்சம் நிறைந்த பொருட்களை வாங்குவர்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

புத்திரர்கள், சில விஷயங்களில் அதிருப்தி கொள்வர். இல்லறத்துணை, சேமிப்பு பணத்தை தந்து உதவுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்களுக்கு, அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு வரலாம். மாணவர்கள், பாதுகாப்பு குறைந்த இடங்களுக்குச் செல்லக் கூடாது.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

குடும்பத்திற்கு பணத்தேவை அதிகரிக்கும். புத்திரர்கள், ஓரளவுக்கே உதவுவர். துஷ்டர்களைக் கண்டால் தூரச் சென்று விடுங்கள். தொழில், வியாபாரத்தில் கூட்டாளிகளிடையே பிரச்னை, பண பிரச்னை வரலாம்; கவனம். பெண்கள், உறவினர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். கடன் தொல்லையால் சில சிரமங்கள் வரலாம். இல்லறத் துணையின் ஆறுதல் வார்த்தை, நம்பிக்கை தரும். தொழில், வியாபாரம் வளர சில மாற்றங்களை செய்வீர்கள். பணியாளர்கள், பொறுமையைக் கடைபிடிக்கவும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு, எதிர்பார்த்த பாடப்பிரிவில் சேர வாய்ப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

வாகனங்களை இயக்கும் போது கவனம் தேவை. புத்திரர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சிறுசிறு பிரச்னைகள் உண்டு. பணியாளர்கள், நிர்வாகத்துடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரிடும். பெண்கள், குடும்பத்தினரிடம் பாசம் கொள்வர். மாணவர்களுக்கு, நண்பர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வாகன பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்களின் உற்சாகம் நிறைந்த செயல், மனதை மகிழ்விக்கும். வழக்கு விவகாரத்தில் அனுகூலம் உண்டு. இல்லறத் துணையுடன் இணக்கமாக இருந்தால், வாழ்வு முன்னேறும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், செலவுக்காக கடன் வாங்க நேரிடும்.

**மகரம்**

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

தாயின் தேவையை நிறைவேற்றுவதால், குடும்ப ஒற்றுமை பலம் பெறும். சொத்துகளை பராமரிக்க அதிகம் செலவாகும். உணவு கட்டுப்பாடு, உடல்நல ஆரோக்கியத்தை மேம்படுத்தும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணியாளர்கள், பணியில் அதிக அக்கறை கொள்வது நலம் தரும். பெண்களிடம், வீட்டுச்செலவுக்கு போதுமான பணம் இருக்கும்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

புத்திரர்களின் எதிர்காலம் சிறக்க, சில பணிகளை மேற்கொள்வீர்கள். நேரத்துக்கு சாப்பிட்டால், உடல்நலம் சிறப்பாக இருக்கும். இல்லறத் துணையுடன் உறவினர் இல்லம் சென்று வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஓரளவே லாபம் வரும். பணியாளர்கள், நிர்வாகத்தின் பாராட்டுடன் சலுகை பெறுவர். பெண்கள், ஆன்மிக சுற்றுலா சென்று வருவர்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

எதிராக இருந்த விஷயங்களை சாதகமாக மாற்றுவீர்கள். புத்திரர்கள், அறிவுத்திறனில் மேம்படுவர். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரம் செழிக்க புதியவர்களின் வருகை துணை நிற்கும். பணியாளர்கள், பணியிட சூழல் உணர்ந்து சிறப்பாக பணிபுரிவர். பெண்களுக்கு, ஓரளவு வருமானம் உண்டு.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 86



எம். ஜீ.ஆர் நிர்வாகத்தில் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பாக இருந்தவர் காவல்துறை பிரதிமா அதிபர் மோகன்தாஸ். தமிழ்நாடு புலனாய்வுப் பிரிவின் தலைவரும் அவரே. சூளைமேட்டுச் சம்பவம் அவருக்கு நல்ல வாய்ப்பைக் வழங்க, இலங்கை தமிழ்ப் போராளிக் குழுக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அவர் தீர்மானித்தார். அந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தவிர, கர்நாடக மாநிலத்தில் விரைவிலே நடைபெற இருந்த சார்க் மாநாட்டை ஒட்டிக் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசின் உள்துறை அமைச்சும் கேட்டிருந்தது. அந்த மாநாட்டில் சிறிலங்கா அரசுத் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் கலந்து கொள்ள இருந்தார். ஆனபடியால் இலங்கை தமிழ்ப் போரா்ளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க சூளைமேட்டுச் சம்பவம் வாய்ப்பாக அமைந்தது. இளம் வழக்கறிஞர் கொலையில் விடுதலைப்புலிகளுக்கு சிறிதும் பங்கில்லை. ஆனால் அனைத்துப் போராளி அமைப்புக்களையும் புலிகள் என்றே பொதுமக்கள் வாய்ப்பாடு செய்திருந்தார்கள். ஆகவே 1986 நவம்பர் 8ஆம் நாள் தமிழ்நாடு காவல்துறையினர் இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்களை நிராயுத பணிகளாக்கும் நடவடிக்கையில் இறங்கினார்கள். புலி நடவடிக்கை என்று அதற்குப் பெயரும் சூட்டினார்கள்.

அதிகாலை ஆறு மணியிருக்கும். ஆயுதம் தரித்த காவல்துறை அணி ஒன்று எமது வீட்டு முன் வாயிலால் முண்டியடித்துக் கொண்டு உள்ளே வந்தது. அவர்களுடைய தோரணை ஏதோ ஒரு பெரிய காரியம் நடைபெறுகிறது என்பதை உணர்த்தியது. என்ன நடக்கிறது ஏன் வந்தார்கள் என்பதே புரியவில்லை. ஆனால் பொது இடம் அல்லாத தனிப்பட்ட வாழ் மனைக்குள் அவர்கள் புகுந்ததில் இருந்தே அது, நட்புணர்வற்ற நடவடிக்கை என்பது புரிந்தது. நாம் கைது செய்யப்படலாம் என்று உள் மனம் கூறியது. எனது கைத் துப்பாக்கி பறிமுதல் செய்யப்படக்கூடாது என்பதற்காக அதை ஒளித்து வைக்க உடனடியாக விரைந்தேன். அதைத் தூக்கி கூரை மீது வீசினேன். பின்னர் அதை அதிகாரிகள் அனுமதி கேட்காமலே வீட்டில் தேடுதல் தொடங்கினார்கள். அக்கு வேறு ஆணி வேறாக சோதனையிட்டார்கள். அந்தத் தருணத்தில் எனது பெற்றோரும் அங்கே கூட இருந்தார்கள். எம்மைப் பார்ப்பதற்காக அவுஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்தார்கள். எந்தவித சமாதானமும் கூறாது காவற்றுறையினர் எமது வீட்டுக்கு அடாத்தாக நுழைந்து நடந்து கொண்ட விதமும் யாரும் உள்ளே வராமலும் வெளியே செல் லாமலும் அறுக்கையிட்ட விதமும் அவர்களை மலைக்கச் செய்திருந்தன. தங்கள் பயணப் பெட்டிகளையும் கைப்பைகளையும் கவிழ்த்துக் கொட்டி ஒவ்வொரு பொருளையும் துருவித் துருவி ஆராய்வதை ஆற்றாமையோடு பார்த்துக் கொண்டிருக்கவே அவர்களால் முடிந்தது.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோக்கிப்...

( 9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தனைகளைக் கொண்டவர்களை உள்வாங்க வேண்டும். அதுதான், தமிழ் மக்களின் அரசியல் போராட்டங்களை தொடர்ந்தும் உயிர்ப்பாக வைத்திருக்கும். மாறாக, நெகிழ்வுப் போக்கின் பக்கம் நகர்வதை மட்டும் இலக்காக்கி செயற்பட முடியாது.

ஒருமித்த இலங்கைக்குள் அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்கிற விடயத்தை பெரும்பான்மையான தமிழ் இளைஞர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் எனலாம். தனித்த நாடு என்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்கிற போது, அடுத்த நிலை தொடர்பில் இளைஞர்கள் சிந்திக்க மாட்டார்கள் என்றில்லை.

இலங்கையின் உள்ளக அரசியல் மாற்றங்களில் தமிழ் இளைஞர்கள் பெருவாரியாக பங்களித்ததும் அதன் போக்கில் தான். அப்படியில்லையெனில், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் சில புத்திஜீவி அமைப்புக்கள் வலியுறுத்தியது போன்று தேர்தல் புறக்கணிப்புக் கோசங்களின் பக்கம் அவர்கள் சென்றிருப்பார்கள்.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு, தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்களில் தேக்கத்தை ஏற்படுத்தியிருப்பது எவ்வளவு உண்மையோ. அதேயளவுக்கு இன்னொரு உண்மையும் இருக்கின்றது.

அது, புலம்பெயர் தமிழர்களுக்கும்- புலத்திலுள்ள தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளியை பெருமளவு அதிகரித்திருக்கின்றது. அந்த இடைவெளி கடந்த ஆறு ஆண்டுகளில் இரு வேறு சமூகங்களின் கூறுகள் போன்று சிந்திக்கும் நிலைக்கு நகர்ந்து விட்டது.

புலம்பெயர்வு என்பது சமூகமொன்றின் வாழ்வியலை மட்டுமல்ல பாரம்பரியம் உள்ளிட்ட அடிப்படைக்காரணிகளையே அகற்றிவிடும் என்பது உலக வரலாறு. அதன் அண்மைக்கால உதாரணமாக, ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்துள்ளவர்களையும் சொல்ல முடியும்.

ஆனால், அதைக் குறையாக கொள்ள வேண்டியதில்லை. ஆனால், அரசியல் போராட்டங்கள் சார்பிலான முடிவுகளை, புலத்திலுள்ளவர்கள் மீது புலம்பெயர்ந்துள்ளவர்கள் திணிக்கும் போது, அது வேறுமாதிரியான வடிவங்களை எடுத்து இடைவெளியின் அளவை அகலித்துவிடுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புத்திஜீவிகளில் அதிகமானோரின் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை உள்ளூர் புத்திஜீவி அமைப்புக்கள், கட்சிகள், முக்கியஸ்தர்கள் சிலரும் பிரதிபலித்தார்கள்.

ஆனால், சாதாரண தமிழ் மகன் இவர்களைக் கண்டுகொள்ள வில்லை. இந்த நிலைமையும் கூட அரசியல் போராட்டங்கள் அச்சுறுத்தலான நிலையை நோக்கி செல்வதற்கான தருணங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

புலம்பெயர்ந்தவர்களும் அவர்களின் புத்திஜீவிகளும் அடிப்படையில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். புலத்திலுள்ள (இங்குள்ள) தமிழ் மக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டே அடுத்த கட்டம் நகர வேண்டியிருக்கின்றது. ஆனால், அந்தப் புள்ளியை புரிந்து கொள்வதில் தொடர் சிக்கல் இருக்கின்றது என்பதை கடந்த கால நடவடிக்கைகள் காட்டி நிற்கின்றன.

ஆயுதப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்னரான தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்கள் தொடர்பிலான பார்வை, கருத்தியல் கொழும்பு, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு என்கிற பிராந்தியங்களாக பிரிந்து நிற்கின்றது.

புலத்துக்குள்ளேயே புரிதலிலும் சிந்தனையிலும் இவ்வளவு சிக்கல்கள் இருக்கின்ற நிலையில், நிலத் தொடர்புகள் அற்று பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கின்றவர்களுடனான கருத்தியல் வேறுபாடு இயல்பானதுதான்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்கள் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதை மட்டுமே இப்போது இலக்காக்கிக் கொண்டிருக்க முடியாது. மாறாக, இழக்கப்பட்டுவரும் கல்வி, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

ஆயுதப் போராட்டங்களின் கோலொச்சுகை தமிழ் மக்களின் பொருளாதாரம், கல்வி எனும் பெரும் சொத்துக்களை குறிப்பிட்டளவில் அழித்துவிட்டது. அதனை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பிலான அக்கறையை புலத்திலுள்ளவர்களும் புலம்பெயர்ந்துள்ளவர்களும் கொள்ள வேண்டும்.

மோதல்கள் முடிவுக்கு வந்து ஆறு வருடங்கள் நிறைவடைந்துவிட்ட போதிலும் மீள் எழுச்சி தொடர்பில் நாம் சிந்தித்தாலும், செயற்பாட்டளவில் தொடர்ந்தும் பின்னோக்கியே இருக்கின்றோம்.

'அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களின் போது இழப்பு சகஜமானதுதான்' எனும் கருத்தியல் தமிழ் மக்களிடையே பலமாக இருக்கின்றது. ஆனால், அந்த இழப்புக்கள் இனமொன்றின் அடிப்படையையே ஆட்டம் காண செய்யும் அளவுக்கு இருக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்கெடுத்தும்- அதற்குள் சிக்கியும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். அவர்களை மனதார நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவது பெரும் கடமை. அந்தக் கடமையை ஒவ்வொரு தமிழனும் செய்ய வேண்டும்.

அதேபோல, எந்தவித தொய்வுமின்றி அரசியல் உரிமைகள், அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டங்களின் அடுத்த கட்டம் நோக்கி முன்னோக்கி பாயவும் வேண்டும். அதுதான், இழக்கப்பட்ட உயிர்களுக்கு நாம் செலுத்தும் பெரும் காணிக்கையாக இருக்கும்.

# குறி வைக்கப்படுகிறாரா...

( 8ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள் நுழைந்ததன் நோக்கம் என்ன? அவ்வாறு உள் நுழைந்தவர் ஜனாதிபதியை நெருங்க முற்பட்டதன் மர்மம் என்ன?

வாகனத்தில் துப்பாக்கியை வைத்துவிட்டு வந்திருந்தால் இடுப்பில் இருந்த துப்பாக்கி சட்ட விரோத செயல் ஒன்றினை அல்லது சதியொன்றினை நிறைவேற்ற திட்டமிட்டு கொண்டு வரப்பட்டதா?

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு இந்த விவகாரத்தில் கடமை தவறியுள்ளதா? போன்ற பல விடயங்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சாணி அபேசேகர தலைமையிலான விசாரணைக் குழுவினரின் அவதானத்துக்கு உட்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலீஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவிக்கின்றார்.

அத்துடன் குறித்த தினம் அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகேயிற்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த விவகாரம் குறித்து 15 இற்கும் அதிகமான வாக்கு மூலங்களை புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்துள்ளதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் தற்போது வரை எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

குறித்த கோப்ரல் சட்ட விரோதமாக எதனையும் செய்யவில்லையெனில் அவரை வெளியேற்றும்போது தமது பிரபு (நாமல்) உள்ளிருக்க அவரை விட்டு விட்டு எப்படி வெளியேறி இருக்க முடியும்.

அத்துடன் இந்தச் சம்பவத்தின் போது ஜனாதிபதிக்கு எதிராக ஏதேனும் சதி முயற்சிகள் பின்னப்பட்டு அதன் பொருட்டு அக்கோப்ரலின் உத்தியோகபூர்வ துப்பாக்கிக்கு பதிலாக வேறு ஒரு சட்ட விரோத துப்பாக்கி கூட பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

எனினும் இச்சந்தேகங்களுக்கு பதில் சொல்ல புலனாய்வு பிரிவினர் அத்துப்பாக்கியை கண்டுபிடிக்க வேண்டும்.

இதனிடையே மேடைகளிலும் ஊடகங்கள் முன்னும் பேசிவரும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ. கோப்ரலிடம் இருந்தது தண்ணீர் போத்தலே எனவும் துப்பாக்கி இருக்கவில்லை எனவும் அதனாலேயே ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் அவரை கைது செய்திருக்கவில்லை எனவும் கூறி வருகிறார்.

அதிரடிப்படையினரிடமிருந்து அந்த கோப்ரல் சேனக குமாரவை பொறுப்பேற்ற ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் சார்ஜனும் அவரிடம் துப்பாக்கி எதுவும் இருக்காததாலேயே அவரை விடுவித்ததாக புலனாய்வு பிரிவினருக்கு தெரிவித்துள்ளார். எனினும் நேரில் கண்ட சாட்சியங்கள் ஊடாக அவரின் இடுப்பில் கைத் துப்பாக்கியொன்று இருந்தமை உறுதி செய்யப்பட்டதாகவும் அதனாலேயே கோப்ரல் சேனக குமாரவை கைது செய்ததாகவும் நாமலின் தண்ணீர் போத்தல் கதைகள் சாட்சியங்களுக்கு அப்பாற்பட்டவை எனவும் பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர சுட்டிக் காட்டுகின்றார்.

இந்நிலையில் இது தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அதில் இப்படி குறிப்பிடுகிறார்:

கோப்ரல் குமார எனது பாதுகாப்பு வீரர். எனது கோரிக்கையின் பிரகாரமே அவர் எனது மகன் நாமலுடன் அன்று கூட்டத்துக்கு சென்றார்.

அவர்களுக்கு பிரபுக்கள் வாயிலினூடாக உள் நுழைய அனுமதி மறுக்கப்படவே அவர்கள் சாதாரண வாயில் ஊடாக உள் நுழைந்துள்ளனர். கோப்ரல் குமார வாயிலிலேயே நின்றுள்ளார்.

சிறிது நேரத்தில் விசேட அதிரடிப்படை வீரர் குமாரவை யார் என கேட்டுள்ளார். அதற்கு தான் இராணுவ வீரர் எனவும் நாமலுடன் பாதுகாப்புக்கு வந்தவர் எனவும் பதிலளித்துள்ளார்.

அவ்விடத்தில் இருக்க வேண்டாம் என குமாரவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படவே அவர் வாகனத்தில் வந்து இருந்துள்ளார்.

கூட்டத்தின் பின்னர் அனைவரும் வீட்டுக்கு வந்தனர். ஊடகங்கள் ஊடாகவே கோப்ரல் குமார ஆயுதம் கொண்டு போன கதையை தான் அறிந்தேன். என அந்த அறிக்கையில் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விவகாரம் பாரதூரமானது. ஜனாதிபதியின் கூட்டம் ஒன்றின் பாதுகாப்பு தொடர்பிலான முழு பொறுப்பும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவையே சாரும் நிலையில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரம சிங்கவும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அங்குணுகொல பெலஸ்ஸ கூட்டத்தில் நடந்த இந்த சம்பவத்தை ஜனாதிபதியின் பாதுகாப்பில் உள்ள பாரிய குறைபாடாகவே நோக்க வேண்டியுள்ளது.

நாட்டின் இரு தலைவர்கள் ஏற்கனவே கொலை செய்யப்பட்டுள்ளார்கள். (பண்டாரநாயக்க, பிரேமதாஸ) என்ற மோசமான வரலாறு கொண்ட இந்த நாட்டின் முதன்மை பிரஜையான ஜனாதிபதியின் பாதுகாப்பில் இதனைவிட விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்த நிலையில் குற்றப்புலனாய்வு பிரிவு முன்னெடுக்கும் விசாரணைகளில் எதிர்காலத்தில் அதிர்ச்சித் தகவல்கள் வெளியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் திருமணங்களால் உண்டாகும் ஆபத்துக்கள்

பித்தன்

இன்றைய உலகு நிகழ்காலத்தில் பல்வேறு விதமான பிரச்சினைகளையும் சவால்களையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய சவால்களில் சிறுவர் துஷ்பிரோயங்கள் பெரும் பகுதியைப் பிடிக்கின்றன. சிறுவர் துஷ்பிரோயங்களில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், அடிப்படைக் கல்வியை பறித்தல், சிறுவர் உரிமை மீறல், சிறுவர் மீதான வன்முறைகள், சிறுவர் திருமணம் போன்றவற்றை தொட்டுக் காட்டலாம். மேலே குறிப்பிட்டவற்றில் சமுகத்தில் வேகமாக வளர்ந்து வரும் பிரச்சினையாக சிறுவர் திருமணம் அமைந்துள்ளதைக் காணலாம்.

ஆரம்ப காலங்களில், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சிறுவர் திருமணம் சமூக ஒழுங்கில் ஒரு வழக்கமாக அல்லது நிகழ்வாகவே பேணப்பட்டு வந்துள்ளது. அதற்கு அந்தக் காலத்தில் காணப்பட்ட இறுக்கமான சமுகக்கட்டமைப்பு, வீண் நம்பிக்கைகள் மற்றும் ஆட்சியியல் போன்ற காரணிகள் சாதகமான வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தன.

ஆயினும் கால ஒட்டத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி , சமுகக்கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் , ஆட்சியியல் மாற்றங்கள், மறுசீரமைக்கப்பட்ட நம்பிக்கைகள் போன்ற காரணிகள் இந்தப் பிரச்சினையை குறிப்பிடத்தக்களவு கட்டுப்படுத்தியிருந்தது எனலாம். எனினும் நிதர்சன உலகில் சிறுவர் திருமணம் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளது என்பது கண்கூடு. பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும், அது நித்திய செய்தியாகவே வலம் வந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

15 வயது மாணவி காதல் தோல்வியால் துக்கிட்டு தற்கொலை , 16 வயது சிறுவன் காதல் மாயையால் பெற் றோர் களை கொலை செய்தான் என தினம்தினம் பல தவறுகள் அந்த வரிசையில் நடந்து கொண்டு தான் உள்ளன.

இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுவதற்கான கார ணத்தை ஆராயும் போது, ஆண் பெண் இருபால ருக்கும் பதின்ம வயதில் ஏற்படுகின்ற பாலியல் ரீதியான கவர்சியின் விளை வேயாகும். அதாவது பதின்ம வயதை அடையும் போது ஆண் மற்றும் பெண் இருபாலாரிடையேயும் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கும். பெண் பூப்படைதல் , ஆண் ஆண்மை பருவத்தை அடைதல் போன்ற மாற்றங்கள் இருவரிடையேயும் பாலியல் கவர்ச்சியை தூண்டும். இத்தகைய சந்தர் பத்திலேயே இவர்களிடத்தில் தவறுகள் ஏற்படுகின்றன. இத்தகைய தவறுகள் இவர்களது எதிர்காலத்தை பாரதூரமான தாக்கிவிடுகின்றன.



இந்தப் பிரச்சினைக்கு ஆளாகும் தரப்பினர் சமுகத்திலிருந்து ஒரங்கட்டப் படல், அவமரியாதைப் படுத்தப் படல், தனிமைப்படுத்தப்படல் உள ரீதியாக பாதிக்கப்படல் போன்ற பிரச் சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவற்றை விடவும் இந்தச்செயற்பாட்டால் அதிகம் பாதிக்கப் படுவது பெண்களே ஆவர். ஏனெனில் உடலியல் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஆணை விட பெண் மாறுபட்டவளே. இதை விடவும் குடும்ப அல கொன்றில் பெண்ணினுடைய வகிபங்கானது பெரும்பகுதியை பெற்று விடுகிறது. அதாவது தாய்மை நிலை , குழந்தை பிரசவித்தல் , அந்தக் குழந்தையின் ஆரோக்கியம் , குடும் பத்தின் கட்டமைப்பு என பெண்ணின் பொறுப்புகள் ஆண் களை விட முக்கியமா னதாகவும் அதிகமானதாகவுமே உள்ளன.

குறிப்பாக ஒரு பெண் தாய்மை பருவத்தை அடைவதற்கு மிக சிறந்த காலமாக 22 - 30 வயது வரையான காலப்பகுதியையே மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதன் அடிப்படையில் இளவயது திருமணத் தின் மூலம் மேற்குறிப்பிட்ட வயதுக்குரிய காலத்தை விட குறைவான காலத்தில் பெண் தாய்மை நிலையை அடையும் போது, பெண்ணின் உடலுக்கு பொருத்த மற்றதாக அமைவதோடு அந்தக் குழந்தையின் வளர்சி போஷாக்கு போன்ற விடயங்களில் ஆபத்தான விளைவை ஏற்படுத்தி விடுகிறது. மேலும் பாலியல் கவர்சியின் காரணமாக இளவயதில் திருமணம் செய்து கொண்டவர்கள் , ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது போல, ஒரு கட்டத்தின் பின் வாழ்கை அவர்களுக்கு கசக்க ஆரம்பிக்கிறது.

அதாவது குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் பிரவேசிக்கும் போது அதன் மீதான சமூக நடை முறை தாக்கங்களை , கட்டமைப்புகளை இவர்களால் ஏற்றுக்கொள்ளவோ அல்லது ஈடுகொடுக்கவோ முடியாது போகிறது. இதன் காரணமாக இவர்களுக் கிடையில் பிரச்சினைகள் , பகைமை கள் தோன்றுவது மட்டுமன்றி தவறான முடிவுகள் மூலம் எதிர்காலம் தடமாறி போகும். அதாவது தமது தவறின் அடையாளமான குழந்தையை அநாத ரவாக கைவிடுதல் , கொலை செய்தல் (இது போன்ற பல சம்பவங்கள் கடந்த காலங் களில் நடந்துள்ளன.) போன்ற தவறான முடிவுகள் இவர்களது எதிர்காலத்தை மட்டுமன்றி. இவர்களது சந்ததியினருடைய எதிர்காலத்தையுமே கேள்வி குறியாக் குகிறது.

மேற் குறிப்பிடப்பட்ட பிரச்சினையை தவிர்க்க வேண்டுமாயின், பெற்றோர்கள் பதின்ம வயதுடைய பிள்ளைகள் மீதான தமது கவனத்தை ஆழமாக்க வேண்டும். ஏனெனில் குறிப்பிட்ட வயதுடைய பிள்ளை கள் எதிலும் அக்கறையும் பொறுப்பும் இல்லாதவர் களாகவும் சுதந்திரமாக இருக்க நினைப்பவராகவும் எளிதில் தவறான வழியில் ஈர்க்கப்படக் கூடியவர் களாகவும் காணப்படுவார்.

பெற்றோர்கள் இந்த வயதினரை அணுகும் போது, அவர்களுடன் கனிவாகவும் நட்பு ரீதியிலும் சாதுரியமாகவும் நடந்து கொள்வதனுடாகவே அவர்களது தேவைகள், நடத்தைகளை அறிந்து கொள்வது இயலும். அவர்களை சரியான முறையில் வழி நடத்தவும் முடியும். குறிப்பாக பெண் பிள்ளைகளை மிகக் கவனமாக பெற்றோர் வழி நடத்த வேண்டும். ஏனெனில் இயற்கை விதிப்படி இனத்தை பெருக்க வேண்டிய பொறுப்பு பெண்களையே சார்ந்துள்ளது. இதனால்தான் பெண்ணினம் கரதலிலும் காமத்திலும் ஆணை கவரவதிலும் மிக எச்சரிக்கையுடன் இயங்க வேண்டியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. (இதற்காக பெண்கள் மோசமானவாகள் என்று அர்த்த மில்லை. அது இயற்கையின் படைப்பு) எனவே பதின்ம வயதினையடைந்த பெண்பிள்ளைகளுக்கு தாய்மார் பாலியல் ரீதியான விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும். அவற்றை விட மகளிருக்கு ஏற்ற சிறந்த சஞ்சிகைகள் வெளி வருகின்றன. அவற்றை வாசிக்க ஊக்குவிப்பதன் மூலம் பாலியல் ரீதியான விடயங்களை அவர்களுக்கு தெரியப்படுத்துவதோடு , தவறுகள் எற்படுவதையும் தவிர்க்கலாம்.



எனவே பெற்றோர்கள், சமூக அமைப்புகள், பதின்ம வயதினர் மீது அதிக கவனம் செலுத்தி அவர்களது வயதின் தன்மையை, தாக்கங்களை சரியான முறையில் விளங்கவைப்பதனூடாக, இளவயதுகளில் இவர்களை ஆட்கொள்ளும் பாலியல் மற்றும் ஏனைய பிரச்சினைகளிலிருந்து அவர்கள்ள மீட்க காப்பாற்ற , மீட்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாவில் இணைந்த காதலர்கள்

பல வருடங்களாகக் காதலித்து எத்தனையோ தடவை முயன்றும் இணைந்கொள்ள முடியாத காதலர்கள் தியலும நீர் வீழ்ச்சியில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டனர்.

பதுளை கொஸ்லந்தை தியலும நீர் வீழ்ச்சிக்கருகில் காதல் ஜோடியொன்று தற்கொலை செய்துகொள்ள தயாராயிருப்பதாக கொஸ்லந்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பதில் பொறுப்பதிகாரி நிஹால் சுகததாச பெண் கான்ஸ்டபிளுடன் ஸ்தலத்துக்கு சென்றார். அங்கு பல காதல் ஜோடிகள் இருந்ததால் விசாரணைகளில் சந்தேகம் ஏற்படவில்லை.

அன்று காலை இந்நீர் வீழ்ச்சிக்கு கீழ்ப்பகுதியில் காணப்படும் ஹோட்டலொன்றில் இளம் ஜோடியொன்று உணவுப் பொட்டலமொன்றை வாங்கியதாக தகவல் கிடைத்ததையடுத்து ஹோட்டல் முகாமையாளரை விசாரணை செய்ததில் இளம் ஜோடியின் அங்க அடையாளங்களை தெரிந்து கொள்ள முடிந்தது.

உல்லாசப் பயணிகள் குழுமியிருந்த அவ்விடத்தில் இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருவேளை நீர் வீழ்ச்சியின் மேல் பகுதிக்கு இவர்கள் சென்றிருக்கலாமென அனுமானம் செய்த பொலிஸார் அவ்விடத்துக்கு ஏறிச்சென்றனர்.

பொலிஸாரும், பெற்றோரும் சேர்ந்து தேடிய ஜோடியின் பெயர் யோகராஜா, சகுந்தலா என்பதாகும். பதினேழு வயதுடைய சகுந்தலா உதயாங்கனி, பதினெட்டு வயதுடைய சரவணபவன் யோகராஜா ஆகியோர் ஊரிலுள்ள பாடசாலையில் ஒன்றாக கற்றனர்.

நான்கு பேர்கொண்ட குடும்பத்தில் யோகராஜா கடைசிப் பிள்ளை இவருக்கு ஒரு வயதாக இருக்கும் போது எதிரிகள் இவரது தாய் தந்தையை வெட்டிக் கொன்றனர். அமராவதி செல்லச்சாமி என்ற சின்னம்மா இவரை வளர்த்து வந்தார்.

காதலர்களான இவர்களுக்கு குடும்பத்தில் எதிர்ப்பு கிளம்பியது. சகுந்தலாவை மறந்து விடும்படி அவரது பெற்றோர் யோகராஜாவிடம் கண்டித்து கூறினர்.

விவசாயியான, சகுந்தலாவின் தந்தை மகளின் எதிர்காலத்தில் பெரும் எதிர்பார்ப்புகளை வைத்திருந்தார்.

பத்தாம் ஆண்டில் பயிலும் சகுந்தலா அவரது சகோதரியின் நோய்க்காக வைத்திருந்த மருந்து வில்லைகளை ஒருமுறை உட்கொண்டு பின்னர் கொஸ்லந்தை ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதித்தன் காரணமாக உயிர் தப்பியிருந்தார்.

மனம் தளர்ந்த யோகராஜா கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து இனிப்புப் பண்டம் தயாரிக்கும் நிறுவனமொன்றில் வேலையில் அமர்ந்தான்.

சில நாட்களின் பின் சின்னம்மாவுக்கும் காதலிக்கும் புதிய உடைகள் வாங்கிவந்தார். புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டாலும் பேச முடியவில்லை. சகுந்தலாவின் தாய் அவளுடனிருந்தார்.

அன்று காலை யோகராஜாவுக்கு கிடைக்கப் பெற்ற தொலை பேசி அழைப்பினையடுத்து அவசரமாக வீட்டை விட்டு வெளியேறினான்.

இதனை சின்னம்மா அவதானித்தார். சகுந்தலா பிரத்தியேக வகுப்புக்கு செல்வதாக கூறி வீட்டிலிருந்து வெளியேறினார். இருவருமாக சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.

தியலும நீர்வீழ்ச்சி இவர்களது இறுதி இடமாயமைந்தது. இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். இவ்வுலகம் எங்கள் காதலை அங்கீகரிக்கவில்லை. ஒருபோதும் நாமிருவரும் ஒன்று சேர இடம் கிடைக்காது.

அதனால் இன்று இவ்வுலகை விட்டுப் பிரிகிறோம் அடுத்த ஜென்மத்திலாவது ஒன்று சேர்வோம் என்றனர். யோகராஜாவின் கையடக்க தொலைபேசியை எடுத்த சகுந்தலா தன்னுடன் வகுப்பில் பயிலும் நிஷாந்திகுமாரியுடன் தொடர்புகொண்டு நாமிருவரும் தியலுமயில் குதிக்கிறோம்.

நீங்கள் நன்றாக இருங்கள் என்று கூறியதுடன் தொடர்பை துண்டித்துக்கொண்டார்.

தியலும நீர்வீழ்ச்சி இவர்களது இறுதி இடமாய மைந்தது. இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். இவ்வுலகம் எங்கள் காதலை அங்கீகரிக்கவில்லை. ஒருபோதும் நாமிருவரும் ஒன்று சேர இடம் கிடைக்காது.
அதனால் இன்று இவ்வுலகை விட்டுப் பிரிகிறோம் அடுத்த ஜென்மத்திலாவது ஒன்று சேர்வோம் என்றனர். யோகராஜாவின் கையடக்க தொலைபேசியை எடுத்த சகுந்தலா தன்னுடன் வகுப்பில் பயிலும் நிஷாந்தி குமாரியுடன் தொடர்புகொண்டு நாமிருவரும் தியலுமயில் குதிக்கிறோம்.
நீங்கள் நன்றாக இருங்கள் என்று கூறியதுடன் தொடர்பை துண்டித்துக்கொண்டார்.

நிஷாந்தி உடனடியாக இச் செய்தியை சகுந்தாவின் தாயிடம் கூறியதையடுத்து பொலிஸ் அவசர பிரிவுக்கும் இச்செய்தியெட்டியது.

தியலும நீர் வீழ்ச்சிப் பகுதியின் மேல்பகுதிக்கு பொலிஸார் சென்றபோது சகுந்தலாவின் தந்தையை அங்கு கண்டனர். மகளைத் தேடி வந்ததாக அவர் பொலிஸாரிடம் கூறினார்.

நீர் வீழ்ச்சியின் அபாயகரமான பகுதியில் காதலர்கள் இருப்பதை கண்ட கான்ஸ்டபிள் சமிந்த மெதுவாக அவர்கள் அருகில் நெருங்கியபோது திடீரென யோகராஜா சகுந்தலாவை கட்டிப் பிடித்தவாறு கால்சறுகியபோது கான்ஸ்டபிள் சமிந்த, சகுந்தலாவின் கேசத்தை பிடித்துக்கொண்டார். இருப்பினும் அவரை காப்பாற்றமுடியவில்லை.

நீர் வீழ்ச்சியின் கீழ் பகுதியிலுள்ளோர் அனைவரும் சப்தமிட்டனர். ஐநூற்றெழுபது அடி உயரமான தியலும நீர் வீழ்ச்சியின் மேல் பகுதியிலுருந்த யோகராஜா சகுந்தலாவை கட்டிப்பிடித்தவாறு கீழ்ப் பகுதிக்கு விழுவதை அனைவரும் கண்டனர்.

முதலில் சகுந்தலாவின் சடலம் கீழ்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. மறுநாள் யோகராஜாவின் சடலம் கற்பாறையில் சிக்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

யோகராஜாவின் சவப்பெட்டி மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது. சகுந்தலாவின் பூதவுடல் அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. இருவரது பூதவுடல்களும் அருகருகே நல்லடக்கம் செய்யப்பட்டன.




யோகராஜா சகுந்தலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகக் கல் கண்டறிதலும் சிகிச்சையும்




சஞ்சீவனம்
ஆயுர்வேத சிகிச்சை மையத்தின்
மருத்துவர் – இந்தியா


சிறுநீரகம் சார்ந்த பிரச்சினைகள் முன்பைவிடத் தற்போது அதிகரித்துவிட்டன. இதற்கு நம் வாழ்க்கைமுறைதான் முதன்மைக் காரணம். அதிலும் தற்காலத்தில், பலரும் அவதிப்படுவது சிறுநீரகத்தில் கல் உருவாகும் பிரச்சினையால்தான்.

சிறுநீரகத்தில் கற்கள் உருவாவது பெரும் வலியைத் தரக்கூடிய உடல்நலப் பிரச்சினைகளில் ஒன்று. மிகச் சிறிய படிவங்கள் தேங்கி, கற்களாக உருவாகிச் சிறுநீரகத்தில் தங்கிவிடுகின்றன. இது வலியை ஏற்படுத்தாதவரை யாரும் இதைக் கண்டுபிடிப்பது இல்லை.

சிறுநீரகத்தில் கல் இருந்து, அது சிறுநீர்ப் பாதை வழியாக நகர்ந்து வெளியேறும்போதுதான் பிரச்சினை ஏற்படுகிறது. இது சிறுநீர்க் குழாயில் அடைப்பை ஏற்படுத்தும்போதுதான், வலி கடுமையாகும். பெரும்பாலும் சிறிய கற்கள் சிறுநீரில் வெளியேறிவிடும். அது வலி, எரிச்சலைத் தருவதில்லை என்பதால் யாரும் இதை உணர்வதே இல்லை. சிறுநீரில் வெளியேற முடியாத பெரிய கற்கள்தான் வலியை ஏற்படுத்துகின்றன.

### கண்டுபிடிக்கும் முறைகள்

பொதுவாகவே சிறுநீரகக் கல் உருவாகும் நபருக்கு ஆரம்ப நாளில் எரிச்சல் ஏற்படும். இதுதான் தொடக்கக் கால அறிகுறி. இந்த நேரத்தில் சிறுநீரின் நிறமும் மாறும். அடிக்கடி காய்ச்சல், குளிர் காய்ச்சல் வரலாம். அத்துடன் உணவு சமிபாடு அடையும் போது அதிகப்படியான எரிச்சல் ஏற்படுகிறதா என்று கவனிக்க வேண்டும்.

இந்த நேரத்தில் வெளியேறும் சிறுநீரின் மணம், ஆட்டு சிறுநீர் போலக் கெட்ட நாற்றம் வீசும். இவையெல்லாம் சிறுநீரகத்தில் கல் இருப்பதற்கான ஆரம்ப அறிகுறிகள்.

இந்த அறிகுறிகளை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிந்துவிட்டால், சிகிச்சை எளிதாகும். நோய் தீவிரமடைவதைத் தடுக்க முடியும். சிறுநீரகக் கல்லால் முதுகுப் பகுதியில், அடி வயிற்றில் ஏற்படும் அபரிமிதமான வலியைத் தவிர்க்க முடியும்.

### கல் உருவாவது எப்படி?

சிறுநீரின் செயற்பாடு என்பதே உடலிலிருந்து கிலேதம் வெளியேறுவதைக் குறிப்பது. கிலேதம் என்பது உணவு சமிபாட்டுக்குப் பிறகு மெல்லிய திரவ வடிவில் வெளியேறுவதாகும். உடலின் பல்வேறு திசுக்களில் சிறிய அளவில் கிலேதம் படிகிறது. இவைதான் பல வேளை சிறுநீரில் வெளியேறுகிறது.

இருந்தாலும் பல நேரம் கிலேதம் படிமமாக உடலில் படிந்துவிடும், பானையில் கீழ்ப் பகுதியில் கல்சியம் படிவதைப் போல. இவ்விதம் படிவதுதான் சிறுநீரகத்தில் கல்லாக உருவாகிறது. ஆயுள்வேதத்தில் சிறுநீரகக் கற்கள் அஷ்மாரி என்றும், சிறிய துகள்கள் சர்க்கரா என்றும் குறிப்பிடப்படுகின்றன.

### தோஷங்களும் சிறுநீரகக் கல் உருவாதலும்

இயற்கையில் காற்று, வெப்பச் சூழலில் மழைநீர் பட்டு நாளடைவில் பாறையாக மாறுவதைப் போல, நமது உடலில் உள்ள தோஷங்களில் ஒன்றான கபம் (உடலின் வெப்ப மாற்றம்) காரணமாகக் கற்கள் உருவாகின்றன. உடலில் பித்தம் காரணமாகச் சூடு ஏற்படுகிறது. வாதம் காற்றைப் போன்றது.

சிறுநீர்த் தொற்றுக்கு ஆளானவர்கள் உணவுப் பழக்கத்திலும் குறிப்பாகத் திரவ உணவிலும் கவனம் செலுத்த வேண்டும். இவர்களுக்கு நோய் தொற்று ஏற்பட்டுச் சிறுநீரகக் கல் உருவாவதற்கான வாய்ப்பு மிக அதிகம். உடலில் உள்ள தோஷங்கள் பாதிக்கப்படும்போது சிறுநீரகத்தில் கல் உருவாகிறது.

> சிறுநீரகத்தில் கல் இருந்து, அது சிறுநீர்ப் பாதை வழியாக நகர்ந்து வெளியேறும்போதுதான் பிரச்சினை ஏற்படுகிறது. இது சிறுநீர்க் குழாயில் அடைப்பை ஏற்படுத்தும்போதுதான், வலி கடுமையாகும். பெரும்பாலும் சிறிய கற்கள் சிறுநீரில் வெளியேறிவிடும். அது வலி, எரிச்சலைத் தருவதில்லை என்பதால் யாரும் இதை உணர்வதே இல்லை. சிறுநீரில் வெளியேற முடியாத பெரிய கற்கள்தான் வலியை ஏற்படுத்துகின்றன.

### உணவுப் பழக்கம்

பொதுவாக அதிக மசாலா சேர்த்த உணவு, புளிப்பு சுவை, செரிமானத்துக்குச் சிரமப்படும் அளவுக்குச் சாப்பிடுவது, இறைச்சி, முட்டை சார்ந்த பொருட்களை அதிகம் சாப்பிடுவது, குறைந்த அளவு தண்ணீர் குடிப்பது ஆகியவை சிறுநீரகக் கல் தோன்றுவதற்கு முக்கியக் காரணங்கள்.

பொரித்த உணவு வகைகள் கபம் என்னும் கிலேதத்தை உருவாக்கும். கோடைக் காலத்தில் இரவு நேரத்தில் தயிர் சாப்பிடக் கூடாது.

ஆயுர்வேதத்தில் அஷ்மாரி (சிறுநீரகக் கல்) நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வடஜா, பிட்டஜா, கபஜா, சுக்ரஜா.

### பித்த உடல் வாகு

பித்த உடல் வாகு உள்ளவர்களுக்குச் சிறுநீரகக் கல் உருவாவதற்கு அதிக வாய்ப்புள்ளது. சிறுநீரகக் கல் உருவாகிப் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலோர் பித்த உடல் வாகு கொண்டவர்களாக உள்ளனர்.

அதிகமாக வியர்வை வெளியேறுபவர்களுக்கும் இந்தப் பாதிப்பு ஏற்படலாம். பித்த உடல் வாகு உடையவர்கள் குளிர்ச்சியான சூழலில், போதுமான அளவு தண்ணீர் குடிப்பதில்லை. அல்லது அதிகமான வெளி வெப்பநிலை நிலவும்போது வியர்வை வெளியேறியும் சிறுநீரகக் கல் உருவாகலாம்.

நமது வாழ்க்கை முறை (மூத்ர வேதகர்ணம்) காரணமாக அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படலாம் அல்லது உரிய நேரத்தில் சிறுநீர் கழிக்காமல் சிறுநீர் பையில் அதிக நேரம் தங்கினாலும் கல் உருவாகும். அதிக உடலுறவு அல்லது தடைபட்ட உடலுறவு போன்றவற்றால் மன உளைச்சல் ஏற்பட்டு அதனாலும் கல் ஏற்படலாம்.

### வெப்பச் சூழலில் பணி

அதிகப்படியான நேரம் மின்னணுப் பொருட்கள் மத்தியில் பணிபுரிவது மற்றும் அதிக வெப்பம் வெளியிடப்படும் பகுதியில் நீண்ட நேரம் பணிபுரிவது, குளிரூட்டப்பட்ட அறையில் அதிக நேரம் பணிபுரிவது போன்றவையும் சிறுநீரகக் கல் உருவாக வழிவகுக்கும். சுற்றுச்சூழல் சீர்கேடும் இதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதிக வெப்பமான பகுதி, தனநீர் அல்லது நீரில் பொஸ்பரஸ் அதிகம் உள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்குச் சிறுநீரகக் கல் உருவாக வாய்ப்புள்ளது.

### நோய்த் தடுப்பு பரிந்துரைகள்

சிறிது எச்சரிக்கையோடு இருப்பதன் மூலம் சிறுநீரகக் கல் உருவாவதை முன்கூட்டியே தடுக்கலாம். எந்த உணவைச் சாப்பிட்டாலும் நன்கு தண்ணீர் குடிக்க வேண்டும். இளம் சூட்டில் உள்ள நீர், குளிர்நீரைவிட நல்லது.

ஈரப்பதம் அதிகமுள்ள உணவு வகைகள், நார்ச்சத்து அதிகமுள்ள உணவு வகைகளைச் சாப்பிடுவது சிறுநீரகக் கல் உருவாகாமல் தடுக்க உதவும். நார்ச்சத்து மிக்க உணவு வகைகள், பழங்களை அதிகம் உட்கொள்ளலாம். குறைந்த அளவு மசாலா, மிளகாய் சேர்க்கப்பட்ட உணவை உட்கொள்வதன் மூலம் உடல் அதிக வெப்பமாவதைத் தடுக்கலாம். நல்லெண்ணெயும் ஒலிவ் எண்ணெயும் உடலுக்குக் குளிர்ச்சி தரும். சாதாரண உப்புக்குப் பதிலாக 'றொக்கர் சோல்ட்' (rocker salt) எனப்படும் இந்துப்பைப் (கல் உப்பு) பயன்படுத்துவது நோயின் தீவிரத்தைக் குறைக்கும்.

மேற்கண்ட விஷயங்கள் உடலின் வெப்பநிலையைச் சீராக வைத்திருக்கவும் சிறுநீர் சீராக வெளியேறவும் உதவும். இதன்மூலம் சிறுநீரகக் கல் உருவாவதைத் தடுக்க முடியும்.

### ஆயுள்வேத அணுகுமுறை

சிறுநீரகக் கல்லின் அளவு 3 மில்லி மீற்றருக்குக் குறைவாக இருந்தால் ஆயுர்வேத சிகிச்சை –


( 22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அகிலத்தை கைக்குள் போடும் 'சிம்காட்'

உலகின் எந்தவொரு மூலையில் இருந்தாலும் ஒரு நொடிக்கும் குறைவாக நேரத்தில் தொலைத்தொடர்புகளை



இணைக்கும் முக்கிய வேலையை கச்சிதமாக செய்கிறது சிம் கார்டில் உள்ள தொழிநுட்பம்.

சிம் (Sim) என்பது ஒருங்கிணைந்த சுற்றுகளைக் கொண்ட ஒரு சிறிய சிப் (Chip) ஆகும். இதனுள் பாதுகாப்பட்ட (international mobile subscriber




identityd IMSI) சர்வதேச மொபைல் சந்தாதாரர் அடையாளம் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

மேலும் தனிப்பட்ட வரிசை எண் (ICCID), பாதுகாப்பு அங்கீகார அம்சம் (security authentication), இடுதல் தகவல் (ciphering information), உள்ளூர் வசதிகளுக்கான தற்காலிக தகவல்கள் 'சிம் கார்டில்' பதிவு செய்யப்பட்டிருக்கும்


அதுமட்டுமல்லாது பயனர்களுக்கு சாதாரண பயன்பாட்டுக்காக தனிப்பட்ட அடையாள எண் (PIN), தனிப்பட்ட நீக்கல் குறியீடு (PUK) என்ற இரண்டு கடவுச்சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிம்மில் உள்ள முக்கியமான சில Key சந்தாதாரர்களை அடையாளம் காணப் பயன்படுகிறது.

தற்போது 900 மில்லியனுக்கு அதிகமானவர்கள் 'சிம் கார்ட்' மூலம் தொலைத்தொடர்பு சேவையை பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக Department of Telecommunications (DoT) பாதுகாப்பு அம்சங்களையும் கருத்தில் கொண்டுள்ளது.

ஆரம்ப கட்டத்தில் European Telecommunications Standards Institute 'சிம் கார்டி'ன் அம்சங்களை TS 11.11 என்ற குறியீட்டில் வரிசைப்படுத்தியது. இது சிம்மின் இயக்கத்தை முழுவதும் விளக்குவதாக இருந்தது.

இதைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு Giesecke & Devrient என்ற நிறுவனம் 'சிம் கார்டை' வெளியிட்டது. 300 'சிம் கார்டு'களை தயாரித்த அந்த நிறுவனம் அதை Finnish wireless network operator Radiolinjaவிடம் விற்றது.




இதுவே 'சிம் கார்டி'ன் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது. இந்த சிம் கார்டுகள் 5v, 3v, 1.8v என மூன்று Voltdகளில் வெளியானது. 1998ஆம் ஆண்டு முன்னர் 5v 'சிம் கார்டு'கள் மட்டுமே அதிக பயன்பாட்டில் இருந்தன.

'சிம் கார்ட்'டின் மையப்பகுதியில் 'சிப்' (Chip) உள்ளது. இந்த Active chip sidedல் தான் மேற்புரப் பரப்பான Metal contact, Bond Wiredஆல் இணைக்கப்பட்டிருக்கும். இதுவே நமது போனுடன் தொடர்பை ஏற்படுத்துகிறது.

Chip பகுதியின் அருகில் Chip Adhesive என்ற அமைப்பும், அதன் மேலே Substrate என்ற அமைப்பும், அதை சுற்றி Encapsulation என்ற அமைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

hot melt என்ற பகுதி Substrateக்கு கீழே கொடுக்கப்பட்டு, இந்த ஒட்டு மொத்த அமைப்பும் card Body உடன் பாதுகாப்பாக இணைக்கப்பட்டுள்ளது. இது தான் கண் இமைக்கும் நேரத்தில் பரிமாற்றப்படும் தகவல்களுக்கு காரணமாக உள்ளது.

இந்த தொலைத்தொடர் சேவையில் Data encryption என்ற முறையில் அனுப்பப்படும் தகவலானது பாதுகாப்பாக பரிமாற்றப்படுகிறது. இந்த முறையை 2013ஆம் ஆண்டு cryptographer and security researcher ஆக உள்ள Karsten Nohl என்பவர் 'சிம் கார்டு'களில் கொண்டு வந்தார்.

மேலும் 2012ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட Nano Sim புதிய அனுபவத்தை பலருக்கும் கொடுத்து இருக்கும். அதற்கு ஏற்றவாறு தற்போது வரும் 'ஸ்மார்ட் போன்'களும் அந்த அம்சங்களை கொண்டதாக இருக்கிறது.

தொலைத்தொடர்பு துறை பல்வேறு முன்னேற்றங்களை அடைந்திருக்கும் வேளையில் 'சிம் கார்டு'களில் இன்னும் பல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# சிறுநீரகக் கல்....

( 21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் எளிதாகக் குணப்படுத்த முடியும். அது மீண்டும் உருவாகாமலும் தடுக்க முடியும். சிறுநீரகக் கல் உருவாகியிருப்பதை நோயாளியின் நடவடிக்கைகள் மூலம் கண்டறிந்துவிடலாம்.

3 மில்லி மீட்டருக்கு மேல் கற்கள் உருவாகியிருந்தால், ஆயுர்வேத முறையில் குணப் படுத்த அதிக நாளாகும். அதேநேரம் இந்த நோய் திரும்ப உருவாகாமல் இருப்பதற்கான வழிமுறைகள் ஆயுர்வேத சிகிச்சையில் உள்ளன. ஏற்கெனவே, அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள், 'லித்தோடிரிப்சி' செய்துகொண்டவர்களுக்கு மீண்டும் சிறுநீரகக் கல் உருவாகாமல் ஆயுர்வேத சிகிச்சை முறையால் தடுக்க முடியும். பொதுவாக சிகிச்சை காலம் 7 நாட்கள் முதல் 21 நாட்கள்வரை.

**சிறுநீரகக் கல் கரையுமா?**

பொதுவாக உடலில் உள்ள தோஷங்களை ஆராய்ந்த பிறகுதான் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. சிறுநீரகக் கல் கரையப் பொதுவாக அளிக்கப்படும் சிகிச்சைகள்:

**ஸ்னேஹனா - உய்வு சிகிச்சை:** இந்த சிகிச்சையில் உள்ளுக்கும் வெளிப்புறத்துக்கும் மருந்து தரப்படுகிறது. இதன்மூலம் சிறுநீர்ப் பாதை சீரடைந்து . தசைகள் விரிவடைந்து சிறுநீர் வெளியேற வழி ஏற்படும். கல்லும் கரைந்து வெளியேறிவிடும். உரிய வகை 'மசாஜ்' மூலம் வாதச் செயல்பாடு சீராக்கப்படுகிறது.

**ஸ்வேதனா - ஒத்தட சிகிச்சை:** வஸ்தி மற்றும் மருத்துவ எனிமா. மருத்துவ குணம் பொருந்திய எண்ணெயைப் பயன்படுத்துவதன் மூலம் ரத்த நாளங்களுக்குள் சென்று விரைவாகச் செயல்படுகிறது.

**உத்தர வஸ்தி - மருத்துவத் தெரபி:** பாதிக்கப்பட்ட பகுதிக்கு மருந்துகள் செல்லும் வகையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**விரேசனா - மருந்து மூலம் தூய்மை செய்தல்:** உடலில் உள்ள அனைத்துச் செல்களையும் இது சுத்தம் செய்கிறது. உடலில் உள்ள தேவையற்ற பொருட்கள், செல்கள், கற்கள் அனைத்தும் சிறுநீர் வழியாக வெளியேறிவிடும். வலி, எரிச்சலின்றிக் கற்கள் வெளியேறிவிடும்.

**சிறப்பு உணவு**


இந்த நோய்க்கு உரிய உணவு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சிறுநீர் அதிகம் வெளியேற வழி ஏற்படும். அத்துடன் எரிச்சல் குறையும், அதிகப்படியாகத் தங்கியுள்ள கிலேதமும் வெளியேறும். தசைகள் வலுவிழக்காமல் வைத்திருக்கவும் உடல் வெப்பநிலையைச் (பித்தம்) சீராகப் பராமரிக்கவும் உதவும்.

மாதுளை, சப்போட்டா, பெருநெல்லி, கறுப்பு திராட்சை, உலர் கறுப்பு திராட்சை, அனைத்துச் 'சிற்றிக் அசிட்' வகைப் பழங்கள் உதவியாக இருக்கும். கொள்ளு சாப்பிடுவதும் நல்லது. பழங்களை வேகவைத்த தண்ணீர் சாப்பிடுவது, நெருஞ்சி முள், முக்குராட்டை கீரை, பார்லி தண்ணீர் குடிப்பது உதவியாக இருக்கும். முருங்கை வேர் கஷாயம் மற்றும் ஆரோட் கஞ்சி ஆகியன பயனளிக்கும்.

இளநீருடன் (200 மி.லி.) சிறிது ஏலக்காய் சேர்த்துத் தினசரிக் குடித்துவந்தால் கல் கரையும். பெருநெல்லி சாற்றைத் தேனுடன் சேர்த்துத் தினசரிக் காலை சாப்பிட்டால் பயன் கிடைக்கும். சின்ன வெங்காயத்தின் சாற்றுடன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டால் உடல் குளிர்ச்சி பெறும்.

வயிற்றுப் பகுதிக்குச் சிறிது வேலை தரும் வகையிலான பயிற்சிகள் மற்றும் வயிற்றுப் பகுதிக்கு மசாஜ் செய்வது ஆகியவை நோயாளிக்கு இதமளிக்கும். வாதத்தைச் சீராக்கவும் இது உதவும். மேற்கண்ட அம்சங்கள் சிறுநீரகக் கல்லை உடைத்து, அவை சிறுநீரில் வெளியேற வழி ஏற்படுத்தும். ***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Sri Lanka Telecom

# 9%

கவர்ச்சிகரமான வட்டி
நட்புத்தன்மை
நம்பிக்கை

## மனங்கவரும் வட்டி
## உளமுணரும் நம்பிக்கை

9% வட்டி வீதம் (வ.தே.வ.)
சிரேஷ்ட குடிமக்களுக்கு மேலதிகமாக 0.5% வட்டி

நல்ல நம்பிக்கையுடன் நட்புத்தன்மையை அதிகம் கொண்டுள்ள எமது நிலையான வைப்பின் மூலம் உங்களுக்கு கவர்ச்சிகரமான வட்டியையும் பெற்றுத் தருகிறோம். அதனாலேயே Softlogic Finance நிலையான வைப்பில் உங்கள் பெறுமதி மிக்க பணத்தை நீங்கள் வைப்புச் செய்ய வேண்டும்.

கொழும்பு தலைமை அலுவலகம் - 0112 359 700 | கொழும்பு நகர அலுவலகம் - 0112 303 373
நாவலை - 0112 807 080-1 | பதுளை - 0552 224 206 | சிலாபம் - 0322 221 415 | தம்புள்ளை - 0662 284 737
எம்பிலிப்பிட்டி - 0472 230 590-1 | கடவத்தை - 0112 923 011-2 | கண்டி - 0812 224 913 | மாத்தறை - 041 2 220 195
நுவரெலியா - 0522 223 382 | நீர்கொழும்பு - 0312 224 714 | இரத்தினபுரி - 0452 230 677
பொலன்னறுவை - 0272 226 727 | காலி - 0912 226 501 | யாழ்ப்பாணம் - 0212 219 444 | அனுராதபுரம் - 0252 226 279
குருநாகல் - 0372 232 875 | செங்கடகல - 0812 232 602 | பாமன்கடை - 0112 367 901

| காலம் | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | |
|---|---|---|---|---|
| | வீதம் | வ.தே.வ. | வீதம் | வ.தே.வ. |
| 12 மாதங்கள் | 9.00% | 9.00% | 8.50% | 8.84% |
| 18 மாதங்கள் | 9.50% | 9.29% | 9.00% | 9.38% |
| 24 மாதங்கள் | 10.00% | 9.54% | 9.00% | 9.38% |
| 36 மாதங்கள் | 10.50% | 9.56% | 9.50% | 9.92% |
| 48 மாதங்கள் | 11.00% | 9.54% | 9.50% | 9.92% |
| 60 மாதங்கள் | 12.00% | 9.86% | 10.50% | 11.02% |


நிபந்தனைகளுக்குட்பட்டது

இல. 13, த பொன்சேகா பிளேஸ், கொழும்பு 04.
தொ.பே. 0112 359 700, 0112 359 600,
பெக்ஸ் : 0112 359 799,
மின்னஞ்சல் : info@softlogicfinance.lk
இணையம் : www.softlogicfinance.lk

அழையுங்கள்: 0112 577 455

softlogic Finance
சொப்ட்லொஜிக் குழுமத்தின் கூட்டு நிறுவனமாகும்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 24/08/1999. 2011ம் ஆண்டு 42ம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமமளிக்கப்பட்டுள்ளது. RAM BBB-/P3
இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நடாத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதி முறைமையின் கீழ் குறிப்பிட்ட வைப்புகளுக்கு பொறுப்பு காப்புறுதிச் செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு வைப்பாளருக்கு அதிகபட்சமாக ரூ. 300,000 வரை நட்டஈடு பெற்றுக் கொள்ள முடியும்.



# EDUCATION LOAN FAIR FOR WORKING PROFESSIONALS

## CIMA-MBA | BBA TOP-UP

Monthly installment starts from Rs 6,700/- during grace period

**CIMA Managerial Level**
BBA TOP-UP Northwood University USA (Final year)

**CIMA Exam Complete**
MBA University of West London (1 Year)

ENTRANCE FREE

23rd May 2015 From 8.00am to 3:00pm
Ramakrishna Hall, Colombo 06.

Financial Solution Providers: HSBC, NSB, NDB bank, Seylan, People's Bank, Pan Asia Bank
Print media partner: வீரகேசரி
ANC Education

Call: 077 333 55 00 | 0777 23 40 77 | 0777 631 691

micromax nothing like anything

## எவரையும், எந்நேரத்திலும்
உங்கள் நினைவுகளில் புகைப்படமாய் பதித்திடும்

புதிய மைக்ரோமெக்ஸ் தொலைபேசிகளிலுள்ள இரட்டைக் கெமராவினால் உங்கள் மனது மறவாத நிகழ்வுகளை இலகுவாக, புகைப்படமாக மாற்றுங்கள். 'செல்.'.பீ' புகைப்படத்திற்கு மிக உகந்தது.



**X2820**
- இரட்டை சிம் பாவனை
- 2.8" TFT திரை
- 2MP பின்புற கெமரா
- முன்புற Digital கெமரா
- வீடியோ ஒளிப்பதிவு முறை
- இசை மற்றும் வீடியோ பிளேயர்
- FM ரேடியோ
- 8GB வரை மெமரி பாவனை

ரூ. 4,290/=



**X3203**
- இரட்டை சிம் பாவனை
- 3.2" திரை
- முன்புற Digital கெமரா
- அழைப்புகளைப் பதிவு செய்தல்
- 8GB வரை மெமரி பாவனை

ரூ. 4,490/=

ஒரு வருட உத்தரவாதம் - நாடளாவிய முகவர்கள்

AUTHORIZED NATIONAL DISTRIBUTOR
metropolitan

மெட்ரோபொலிட்டன் காட்சியறைகள்: இல. 93/1/1, ஹூணுப்பிட்டி லேக் வீதி, கொழும்பு 02. 0777783783
இல. 50, 3ஆம் மாடி, மஜெஸ்டிக் சிற்றி. 0777781781

HSBC | HNB — கிடைக்கும் வட்டி இலவச தவணைகளில்
பெறுதாரங்களில் மெட்ரோபொலிட்டன் காட்சியறைகள்

M-Centres
பதுளை-0716798528 காலி-0772663593 அநுராதபுரம்-0772663634 குருநாகல்-0772663576
இரத்தினபுரி-0454920340 களுத்துறை-0772663643 மாத்தறை-0772202187 பாணந்துறை-0777742800
கொள்ளுப்பிட்டி-0770799181 நுகேகொடை-0779940483 பத்தரமுல்லை-0777037796 மொறட்டுவை-0779559770
வத்தளை-0773727426 நீர்கொழும்பு-0714946920 கண்டி-0772663579 அநுராதபுரம்-0772663676

Arpico Super Centers
ஹைட்பார்க் கோனர்-0114734323 நாவின்ன-0114310374 பத்தரமுல்லை-0114411543
வத்தளை-0114641795 நீர்கொழும்பு-0317500750


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 மே 20ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org